
விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 132 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 16 திங்கட்கிழமை (29.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக ரணில்!

### பசிலுக்கு திருப்தி; நாமல் அதிருப்தி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரம சிங்கவிற்கு ஆதரவை வழங்கு வதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ விருப் ▷15

## நான் பசிலின் கைப்பொம்மையல்ல

### நீதியமைச்சர் விஜயதாஸ காட்டம்




(கொழும்பு)

பசில் ராஜபக்ஷ கூறுவதற் கேற்ப ஆட நான் ஒன்றும் பொம்மை கிடையாது என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தி யாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒரு ▷15

## செயலாளரின் பதவிக் காலம் நீடிப்பு



நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறி வர்தனவின் பதவிக்காலம் ஒரு வருடத்தால் நீடிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஏப்ரல் 26 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகை யில் அவரின் பதவிக் காலம் மேலும் ஓராண் டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. (ந-7,10)

## தமிழர்களின் அரசியல் தீர்வுக்காக தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவோம்

### பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்



(கிளிநொச்சி)

தமிழ்ப் பொது வேட்பாளர் ஜனாதிபதியாகத் தெரிவு செய் யப்பட வாய்ப்பில்லை என்பது எமக்குத் தெரியும். ஆயினும் தமிழர்களின் அரசியல் அபி லாசைகளினை ஒரு மித்த குரலாக உலக ▷15

### மகிந்த, கோட்டா போல

# ஜனாதிபதி ரணிலும் தமிழர்களின் எதிரியே

### எதிர்க்கட்சி கொறடா பகிரங்கம்

(கொழும்பு)



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எவரும் ரணில் விக்கிரமசிங்க வுக்கு வாக்களிக்க மாட்டார்கள். மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ போலவே ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் மக்கள் எதிரிதான் என பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய மக்கள் சக்தி பகிரங்கமாக தெரிவித்துள்ளது. *(04ஆம் பக்கம் பார்க்க)*

## இலவச அரிசியிலும் மோசடி ; ஊழல்

### உடன் விசாரணைக்கு பணிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் இலவசமாக விநியோகிக்கப் படும் அரிசி தரமற்றதாகவும் மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் எழுந்துள்ள குற்றச்சாட்டுக் கள் தொடர்பில் உடனடியாக விசாரணை களை மேற்கொள்ளுமாறு பொது நிர்வாக ▷15

## ஜனாதிபதி செயலகத்தின் பெயரால் மோசடி

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றி வருவ தாகக் கூறி பொதுமக்களை ஏமாற்றும் நபர்கள் தொடர்பில் மிகவும் அவதானமாகச் செயற்படுமாறு ஜனாதிபதி செயலகம் விசேட அறிவிப்பின் ஊடாக அறிவுறுத்தியுள்ளது.

முதலீட்டாளர்கள், வேலை தேடுபவர் ▷15

## மே 2 முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டம்

### பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

(கொழும்பு)

அனைத்து பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி முதல், கால வரையறை யற்ற வேலைநிறுத்த போராட் டத்தில் குதிக்கவுள்ளனர்.

இது தொடர்பான தீர்மானம் நேற்று முன்தினம் கூடிய கூட்டத்தில் ▷15

## காய்ச்சலால் சிறுமி மரணம்

(அச்சுவேலி)

காய்ச்சல் மற்றும் வாந்தி காரணமாக சிகிச்சை பெறு வதற்காக வைத்தியசாலை க்குச் சென்று கொண்டிருந்த சிறுமியொருவர் போகும் வழியிலேயே ▷04

### ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்

## பிரதேச செயலகங்களுக்கு அரச நிதியொதுக்கீடு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, அபிவிருத்தி திட் டங்களுக்காக ஒவ்வொரு பிர தேச செயலகப் பகுதிக்கும் 100 மில்லியன் ரூபாயை அரசாங் கம் ஒதுக்கீடு செய் துள்ளது. ▷04

## தப்பியோடும் எண்ணம் எனக்கில்லை

### மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

தென் கொரியாவுக்கோ அல்லது உலகின் வேறு எந்த நாடுகளுக்கோ தப்பிச் சென்று வாழ வேண் ▷02

## 2019இல் கோட்டாவை ஆதரித்தீர்கள் 2024இல் எங்களை ஆதரியுங்கள்

### வெளிநாட்டில் உள்ளவர்களிடம் அநுர வேண்டுகை



(சுவீடன்)

2019இல் கோட்டாபய ராஜ பக்ஷவிற்கு வழங்கியது போன்ற ஆதரவை தனக்கு வழங்க வேண் டும் என அநுரகுமார திசநாயக்க வெளிநாட்டில் உள்ள இலங்கை யர்களிடம் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

சுவீடனின் ஸ்டொக் ஹோமில் உரையாற்று ▷04



## டிரான் அலஸ் பதவி விலக வேண்டும்

சட்டத்தரணிகள் தீர்மானம் ▷03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (586)

076 825 7716 (ஆகாஸ்)


## துயர் பகிர்கின்றோம்



எம்மோடு இணைந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் சமகாலத்தில் பணிபுரிந்த

### திருமதி ஜெயந்தி ஜெயதரன்

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து துயரடைகின்றோம்.
அவரது மறைவினால் துயரடைந்துள்ள குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சமகாலத்தில் அவரோடு பணியாற்றிய
யூனியன் கல்லூரி ஆசிரியர்கள்

## தப்பி...

டிய அவசியம் தனக்கு இல்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட அறிவித்தல் ஒன்றினூடாக தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி நாட்டிலிருந்து தப்பியோடி தென்கொரியாவில் வாழப் போகிறார் என்ற பொய்யான தகவல்கள் பல்வேறு ஊடகங்கள் மூலம் பரப்பப்படுவதை யடுத்து, இந்த அறிவித்தலை அவர் வெளியிட்டுள்ளார். (ந-7.10)

## அதிக வெப்பநிலை தொடர்பில் எச்சரிக்கை

வடக்கு மாகாணம் உள்ளடங்கலாக நாடளாவிய ரீதியில் வெப்பநிலை இன்று அவதானம் செலுத்த வேண்டிய மட்டத்திற்கு அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ந-7.10)


**வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு: (551)

074 17 37 684

**தேவை**

பேக்கரி மெசின்கள்
Second Hand காஸ்,றொட்டரி அவன்களும்,மாகுழைக்கும்,கேக் மிக்சர்களும்,அச்சுக்களும்,பேக்கரி பாஸ் (Master),உதவியாளர்களும், பேக்கரி இண்கிறீடியன்ஸ் வழங்குனர்களும் தொடர்பு கொள்ளவும். (600)

075 076 6979
077 252 3155

**CANADA VISA**

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

021 222 5686
076 424 7111
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna. (511)

**Vacancies at Northern Central Hospital**

We Northern Central Hospital the leading private healthcare provider in Northern Province, Sri Lanka are currently seeking experienced and self-motivated individuals to join our team.

**MEDICAL OFFICER – cadre for contract basis**

Requirements:

- MBBS with SLMC registration.
- Possess good public relations skills.
- Retired medical officers are encouraged to apply.
- Medical officers with experience in critical care unit will be an added advantage.
- Registered medical practitioners (RMP) also can apply.

Email ID: jnthabitha@gmail.com , WhatsApp: 0776098867 (c-0226)


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 - 03 - 1947 | 28 - 04 - 2024 |

### புதியார் நாகமுத்து

( ஓய்வுநிலை உத்தியோகத்தர்
சீமெந்துக் கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை )

சாந்தாதோட்டம் ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வளவு கரணவாய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட புதியார் நாகமுத்து அவர்கள் 2024.04.28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புதியார் - செல்வி தம்பதியரின் அன்புப் புத்திரனும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - இளையதங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் சிவமணி (ஓய்வுநிலை குடும்பநல உத்தியோகத்தர்) அவர்களின் அன்புக் கணவரும் சிவதர்சன் (கிராம அலுவலர் - அல்வாய் J/378), சங்கமி ( முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - நகரசபை பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்னம்மா, சிவசுப்பிரமணியம், கமலாதேவி, சுமித்திரதேவி,சந்திரன், காந்தரூபன்,சிறிலங்கரூபன்,அமரரான சாந்தரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திலீபன் (உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்),நிவேதிகா (தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை)ஆகியோரின் அன்பு மாமனாரும் அகரன்,அகானா ஆகியோரின் பாசமிகு பேரனும் அமரர் அசையாமணி,அமரர் சின்னமணி, சிவஞானம்,அமரர் சின்னராஜா,ஜெயமணி, சிவபாதம், செல்வச்சோதி, யோகமணி,பூபாலன்,சரஸ்வதி,அமரரான யோகராசா,தவராசா, வதனி, சியாமளா,மல்லிகாதேவி,ஞானகலை ஆகியோரின் மைத்துனரும் கிருஷ்ணபிள்ளை, பேரின்பவதி,மகேஸ்வரி,கமலேஸ்வரன், மகாதேவா,ரஜனி, குணராசா ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் அருள்குமரன் ( பொதுச் சுகாதாரப் பரிசோதகர் - கரவெட்டி),அமரர் கீர்த்தனன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (2024.04.29)அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் வதிரி ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(c-0225)

பாடசாலை வளவு,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

077 844 9151
077 344 3962

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### வைத்தீஸ்வரன் ரஞ்சிதமலர்

கோப்பாய் தெற்கு, கற்பகப்பிள்ளையார் கோவிலடியை வதிவிடமாகக் கொண்ட வைத்தீஸ்வரன் ரஞ்சிதமலர் அவர்கள் 28.04.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் வேதாரணியக்குருக்கள்-மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் தியாகராசா-மகேஸ்வரியின் பாசமிகு மருமகளும் வைத்தீஸ்வரன் அவர்களின் பாசமிகு மனைவியும் சறோஜா,சுசிலா,உசாவின் பாசமிகு தாயாரும் ஜெயராணி பாலச்சந்திரக்குருக்கள், பாலசுப்பிரமணியம், முத்துச்சாமி, ராஜேஸ்வரி மற்றும் நாகேஸ்வரியின் பாசமிகு சகோதரியும் திருநாவுக்கரசு, சுந்தரி காலஞ்சென்ற சோமசேகரம் மற்றும் கெங்காதரன், சுமத்திராதேவி, குமுதவல்லி, சற்குணராசா, சிவராசா, சித்திரா, மற்றும் கமலா ஆகியோரின் மைத்துனியும் ஜெயக்குமார், பவானந்தம் அவர்களின் பாசமிகு மாமியாரும் சிவகாயத்திரி, லகிஷனின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (29.04.2024) பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்

தகவல்:
தியாகராஜா வைத்தீஸ்வரன்
கணவர்
(உசா பான்சி ஹவுஸ்)
077 223 6063

(601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய பெருங்கடல் பாதுகாப்பில் இலங்கை
## கண்காணிப்பு விமானத்தை வழங்கும் அவுஸ்திரேலியா

(கொழும்பு)

ஆசிய பெருங்கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பணியாற்றுவதற்கு இலங்கைக்கு சிறப்பு கண்காணிப்பு விமானத்தை அன்பளிப்பாக வழங்குவதற்கு அவுஸ்திரேலியா தீர்மானித்துள்ளது.

அவுஸ்திரேலிய வெளிநாட்டலுவல்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்தின் பிரதி செயலாளர் மிச்சேல் சங் இதற்கான இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

மிச்சேல் சங்கின் அண்மைய இலங்கை விஜயத்தின்போது, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்கவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமையவே சிறப்பு கண்காணிப்பு விமானத்தை அவுஸ்திரேலியா இலங்கைக்கு வழங்குகிறது.

சட்டவிரோத குடியேற்றங்கள் மற்றும் ஆள் கடத்தல் என்பவற்றை தடுப்பது உள்ளிட்ட இலங்கையின் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முதற்கட்டமாக இந்த விமானம் வழங்கப்படுவதாக மிச்சேல் சங் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான அறிவிப்பு மே தினத்தில் வெளியாகும்
## ஐ.தே.க தெரிவிப்பு


(கொழும்பு)

**உத்தேச ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் மே தின கூட்டத்தின் போது விசேட அறிவிப்பு ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிடவுள்ளதாக தெரியவருகின்றது.**

அன்றைய தினத்தில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கும் அரசியல் கட்சிகள் மே தின மேடையில் ஏறவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டம் நாளை மறுதினம் புதன் கிழமை 2 மணிக்கு கொழும்பு - மருதானை பகுதியில் இடம்பெறவுள்ளது.


சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்பார்கள் என்று கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.



அதேவேளை ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்குமாறு பல அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன்,

இவ்வாறு பங்கேற்கும் கட்சிகளுடன் ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி உருவாக்கப்படவுள்ள பரந்துபட்ட அரசியல் கூட்டணி உருவாக்கப்படும் எனவும் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். (நி-6)

# பாதுகாப்பு அமைச்சர் டிரான் பதவி விலக வேண்டும்
## சட்டத்தரணிகள் தீர்மானம்



(கொழும்பு)

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்க்கு எதிராக, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பொதுச்சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

குற்றவாளிகளை ஒழிப்பது பாவம் இல்லை என புதிதாக நியமிக்கப்பட்ட பொலிஸ் ஆட்சேர்ப்பாளர்களிடம் அவர் கூறியதை கண்டித்தே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார்.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் குற்றச் செயல்களை ஒழிப்பதற்கான முதலாவது உந்துருளி பிரிவின் விசேட பயிற்சி பெற்ற அதிகாரிகளின் அணிவகுப்பில் அமைச்சர் கடந்த வியாழன் அன்று பங்கேற்றார்.

இதன்போது கொலைகள், போதைப்பொருள் விற்பனை மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றில் ஈடுபடுபவர்களை ஒழிப்பது பாவம் அல்ல என்று அமைச்சர் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இந்த நிலையில் அமைச்சர் பதவி விலகாவிட்டால், பொது பாதுகாப்பு அமைச்சு பதவியில் இருந்து அவரை நீக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியும் அமைச்சர் பதவியில் இருந்து அவரை நீக்கப்படாவிட்டால் உள்ளூர் மற்றும் சர்வதேச சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக சட்டத்தரணிகள் சங்க தலைவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# நாட்டில் அதிகரித்த போதை பாவனை 230 புனர்வாழ்வு நிலையங்களில் சிகிச்சை

(கொழும்பு)

நாட்டில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 230 புனர்வாழ்வு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இந்த புனர்வாழ்வு நிலையங்களின் சேவைகள் எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் சட்டத்தரணி ஷக்ய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் போதை மாத்திரைகளை பயன்படுத்தும் போக்கு அதிகரித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நச்சுத்தன்மை வாய்ந்த போதைப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாகவே இவ்வாறு போதை மாத்திரைகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 3,63,438 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# பல்கலை கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்க நடவடிக்கை

(கொழும்பு)


கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் மற்றும் கொடுப்பனவுகளை நீக்குவது தொடர்பான அமைச்சரவை அறிக்கையை அமைச்சரவை உப குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் இப் பிரச்சினைக்கான தீர்வினைப் பெறுவதற்கு வெற்றிகரமான நடவடிக்கைகளை மேற் கொள்ளாமையினால் அரச பல்கலைக்கழக அமைப்பு முறையில் பாரிய தொழில் சார் பிரச்சினைகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பான அமைச்சரவை அறிக்கைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி அமைச்சரவை உப குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு
077 839 3974
(549)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. நல்லதம்பி சந்திரராஜா
(பிரதி அதிபர்) (PGDEM)

அண்மையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாக்களில் பட்டங்களைப் பெற்ற எமது கல்லூரியின் பிரதி அதிபர், ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

Congratulations



திருமதி. அஜந்தா ஸ்ரீகந்தநேசன்
(M.Ed)(Hons)



திருமதி. சொரூபினி வினோத்
(BIT)

வாழ்த்துவோர்
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.



திருமதி. அபிராமி சுதன்
(B.Ed)


(587)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ருதுராஜ் 'ருத்ரதாண்டவம்'

## ● சென்னை மீண்டும் வெற்றி வலம்
## ● ஹைதராபாத்துக்கு மீண்டும் ஏமாற்றம்



ருதுராஜ் (98 ஓட்.), துஷார் தேஷ் பாண்டே (4 விக்.,) அசத்த, சென்னை அணி 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் "நடப்பு சம்பியன்" சென்னை - ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணியின் தலைவர் கம்மின்ஸ் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

**ருதுராஜ் அபாரம்**

சென்னை அணிக்கு ரகானே (9) ஏமாற்றினார். பின் இணைந்த அணித் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட், டேரில் மிட்செல் ஜோடி கைகொடுத்தது. ஷாபாஸ் அகமட், புவனேஷ்வர் ஓவரில் தலா 2 பவுண்டரி விரட்டிய ருதுராஜ், கம்மின்ஸ் பந்தை சிக்சருக்கு அனுப்பி 27 பந்தில் அரைச்சதம் கடந்தார். பொறுப்பாக ஆடிய மிட்செல் 29 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். இரண்டாவது விக்கெட்டுக்காக 107 ஓட்டங்கள் சேர்த்த போது உனத்கட் பந்தில் மிட்செல் (52) ஆட்டமிழந்தார். நடராஜன் ஓவரில் 2 சிக்சர் விளாசிய ஷிவம் துபே, கம்மின்ஸ் வீசிய 18வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி விளாசினார். மூன்றாவது விக்கெட்டுக்காக 74 ஓட்டங்கள் சேர்த்த போது நடராஜன் "வேகத்தில்" ருதுராஜ் (98) வெளியேறினார்.

20 ஓவர்களில் சென்னை அணி 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 212 ஓட்டங்களை எடுத்தது. துபே (39), தோனி (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**சபாஷ் தேஷ்பாண்டே**

சவாலான இலக்கை விரட்டிய ஹைதராபாத் அணிக்கு துஷார் தேஷ் பாண்டே தொல்லை கொடுத்தார். இவரது "வேகத்தில்" ஹெட் (13), அன்மோல்பிரீத் சிங் (0), அபிஷேக் சர்மா (15) வெளியேறினர். மார்க்ரம் (32) ஆறுதல் தந்தார். நிதிஷ் குமார் ரெட்டி (15), கிளாசன் (20), அப்துல் சமத் (19) சோபிக்கவில்லை. ஷாபாஸ் அகமட் (7), அணித் தலைவர் கம்மின்ஸ் (5), உனத்கட் (1) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

18.5 ஓவர்களில் ஹைதராபாத் அணி 134 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது. புவனேஷ்வர் (4) ஆட்டமிழக்காமல் இருந்தார். (7,10)




ஈடன் கார்டன்ஸ், கொல்கத்தா. இரவு 7.30 மணி

## காய்ச்சலால்...

நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - ஆவரங்கால் கிழக்கு புத்தூரைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் சஸ்மிதா என்ற 5 வயதான சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

சில தினங்களுக்கு முன்னர் குறித்த சிறுமி உடல் இயலாமை (காய்ச்சல்) காரணமாக அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு சென்று வீடுதிரும்பியுள்ளார்.

இந்நிலையில் நேற்று வீட்டில் மயக்கமடைந்த நிலையில் பெற்றோர் சிறுமியை அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு மீண்டும் கொண்டு சென்ற போதே சிறுமி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பிலான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டதையடுத்து சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்கு பின்னரே உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந-7,10,33)

## 2019இல்...

கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019இல் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றிபெறுவதற்கு வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் முக்கிய பங்களிப்பை வழங்கினார்கள். இம்முறை வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் பிரதான தெரிவாக தேசிய மக்கள் சக்தி காணப்படுகின்றது.

வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் தற்போது அமைப்பு மாற்றத்திற்காகவும் புதிய இலங்கைக்காகவும் பரப்புரை செய்கின்றார்கள். அவர்களின் தெரிவாக தேசிய மக்கள் சக்தி காணப்படுகின்றது. இலங்கைக்கு வந்து எங்களிற்காக நீங்கள் பரப்புரை செய்யுங்கள் அல்லது எங்களின் ஆதரவை அதிகரிப்பதற்காக இணையவழி பிரச்சாரத்தில் ஈடுபடுங்கள்.

இலங்கையில் உள்ள குடும்பத்தவர்கள் தொலைபேசிகள் மூலம் உங்களை தொடர்புகொள்ளும்போது அவர்களிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ள அவர்,

எதிர்வரும் தேர்தல்களில் வெளிநாட்டில்உள்ள இலங்கையர்கள்மிக முக்கியமான சக்தியாக காணப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார். (ந-7,10)

## பிரதேச...

இந்நிலையில், அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்துமாறு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றும் செயற்பாடுகள் தாமதமாகி வருவதால், இது குறித்து ஆலோசிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை கடந்த வியாழக்கிழமையன்று சந்தித்து கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு சாலைகள் மற்றும் நீர்ப்பாசன கால்வாய்கள் போன்ற அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கம் நிதி ஒதுக்கீட்டை வழங்கியுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள கிராம அபிவிருத்திக் குழுக்களின் முன்மொழிவுகளின் அடிப்படையில் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

திட்டத்தின் ஆரம்ப கட்டத்துக்காக 10 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

## ஜனாதிபதி...

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைப் போல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் மக்களின் எதிரியாவார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான லக்சுமன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவருக்கு எதிராகவே வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள், தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வெற்றியடைவார்.

சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் அரசியல் தீர்வு காணப்படும் என்பதுடன் அவர் எப்போதும் மக்கள் பக்கமே நிற்பார்.

அத்துடன் எந்த அரசியல் தலைவருடனும் பகிரங்க விவாதம் நடத்துவதற்கு சஜித் பிரேமதாஸ தயாராகவே இருக்கின்றார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-7,10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் நிலையம் செல்லாது

## ஒன்லைனில் முறைப்பாடு செய்யலாம்

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

ஒன்லைன் தொழில்நுட்பத்தின் மூலம் பொதுமக்கள் முறைப்பாடுகளை வழங்கினால் முறைப்பாட்டாளர் இருக்கும் இடத்துக்கு உடனடியாக பொலிஸ் குழுக்களை அனுப்பி முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் புதிய முறையை அறிமுகப்படுத்த பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கை வார நாட்களில் அமுல்படுத்தப்படவுள்ளதுடன், இனி மேல் பொதுமக்கள் முறைப்பாடுகளை வழங்க பொலிஸ் நிலையங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை என பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளை TELL IGP என்ற பொலிஸ் இணையதளம் ஊடாக வழங்கினால் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களிலுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் ஆலோசனையின் பேரில் கொழும்பு மாவட்டத்தில் இந்த நடவடிக்கை முதலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 22 பொலிஸ் நிலையங்களிலும் இந்த புதிய முறையை அறிமுகப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (நி-6)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

## ஆதனப் பெயர்மாற்றம்

### 11/4, உடுக்கியவளை வீதி, வட்டாரம்-10

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 10. உடுக்கியவளை வீதியிலுள்ள இல: 11/4 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் பொன்னையா விஜயரத்தினம் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை துரைசிங்கம் கெங்காதரன் ஆகியவர் குறித்த ஆதனம் சுப்பிரமணியம் என்பவருக்கு சொந்தமாக இருந்து அதன் பின்னர் சுப்பிரமணியம் அருணாசலம், சுப்பிரமணியம் கிருஷ்ணபிள்ளை ஆகியோருக்கு சொந்தமாகவிருந்து அவர்களின் பின்னர் சகோதரி துரைசிங்கம் தெய்வானைப்பிள்ளை ஆகிய தனது மாதாவை வந்தடைந்தது என்றும் அவரது இறப்பின் பின்னர் தனது பொறுப்பிலும் உடைமையிலும் இருக்கின்றது எனவும், குறித்த ஆதனத்திற்கான சோலைவரி குறித்த சுப்பிரமணியம் என்பவரின் உறவினரான அக்காலத்தில் குறித்த ஆதனத்தினை பார்த்த பராமரித்து வந்த பொன்னையா விஜயரத்தினத்தின் பெயரில் பதியப்பட்டுள்ளது எனவும் தற்போது தன்னால் சோலைவரி செலுத்தப்பட்டு வரப்படுகின்றது எனவும் குறித்த ஆதனம் குறித்த சுப்பிரமணியம் என்பவருக்கு சொந்தமாக இருந்து அவர் வழிவந்த தனது உடைமையும் ஆட்சியுமானது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு கு.விசுவலிங்கம் முகதாவில் 7085/26.10.2016ஆம் இலக்கத்தில் பிரகடனப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

**பாலசுப்பிரமணியம் வாகீசன் மனைவி அனிதா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு கு.விசுவலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8650/15.09.2019ஆம் இலக்க உறுதியால் குறித்த **துரைசிங்கம் கெங்காதரன்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **பாலசுப்பிரமணியம் வாகீசன் மனைவி அனிதா** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **பாலசுப்பிரமணியம் வாகீசன் மனைவி அனிதா** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (570)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-14, கன்னாதிட்டி வீதி, 144 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் D.கோபாலசாமி பத்தர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கன்னாதிட்டி றோட் 51ஆம் இலக்கத்தைச் சேர்ந்த துரையப்பா பத்தர் கோபாலசாமியும் பெண் பொன்னம்மாவும் 31.05.2010ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு வை.த.சிவலிங்கம் முகதாவில் 1187ஆம் இலக்கத்தில் நன்கொடை உறுதி மூலம் தங்களது மகளான அதே இடத்தைச் சேர்ந்த செல்லத்தம்பி செல்வகலியுகவரதன் பெண் சுபத்ராவுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் 1937ஆம் ஆண்டு சித்திரை மாதம் 1ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு கே.எஸ்.வீரவாகு முகதாவில் 22604ஆம் இலக்கத்தில் முடிந்த நன்கொடை உறுதிப்படி துரையப்பா பத்தர் கோபாலசாமியும் பெண் பொன்னம்மாவுக்கும் வந்தடைந்த சொந்தமும் ஆட்சியுமானது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக் கோயில்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை, "தட்டான் தறை" நில.பர2 குளி 3/4 ஆனால் இது 1986.05.30இல் நில அளவையாளர் அ.சந்தியாப்பிள்ளை அளந்து தயாரித்த 1122ஆம் இலக்கப்படத்தின்படி துண்டு1, துண்டு 2 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 16.93. இதில் ஏற்கனவே கொடுத்த துண்டு 2 என அடையாளமிடப்பட்ட நில.பர.00 குளி 10.78 உம் வீடும் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அரைவாசியும் இதனுள் இருக்கும் இரு கடைக்கட்டிடங்களும் இந்த நிலப்பரப்பு 00 குளி 10.78இற்கும் எல்லைகள்.

கிழக்கு :- கிருஷ்ணசாமி ஸ்ரீராம் பெண் நிர்மலாவுக்குரிய ஆதனம்
வடக்கு :- கன்னாதிட்டி றோட்
மேற்கும்:- கோபாலச் செட்டியாரினதும் கதிர்காமன் செட்டியாரினதும் உரித்தாளரின் ஆதனம்.
தெற்கும் :- இதடங்கலும், இதன் வரிமதிப்பீட்டு இலக்கம் 142, 144 கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்.

தற்போது செல்லத்தம்பி செல்வகலியுகவரதன் பெண் சுபத்ரா இவ்வாதனத்தை தாம் நியமித்த அற்றோனித் தத்துவக்காரர் திரு.கிருஸ்ணமூர்த்தி புஸ்பநாதன் மூலம் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்லத்தம்பி செல்வகலியுகவரதன் பெண் சுபத்ரா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை.** (சி-0221)

# இராசிபலன்

29. 04. 2024
சித்திரை 16, திங்கட்கிழமை
பஞ்சமி காலை 6.12 மணிவரை
சஷ்டி பின்னிரவு 4.52மணிவரை
பூராடம் பின்னிரவு 2.39 மணிவரை
சுபநேரம் 11.58-1.28 மணிவரை
இராகுகாலம்-7.28-8.58 மணிவரை
சந்திராஷ்டமம் - கார்த்திகை

**வளவன்**

**மேஷம்**
ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், பயணங்கள் கைகூடும்.

**ரிஷபம்**
உறவினர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்,குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மிதுனம்**
புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பழைய சடங்கு சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை ஏற்படும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கடகம்**
உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும் வாய்ப்புண்டு, வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்**
பிரபலமானவர்கள் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**கன்னி**
நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், பெற்றோர்கள் மீது பிரியம் கூடும், கௌரவமான நாள்.

**துலாம்**
சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**
குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொருளாதார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உற்சாகமான நாள்.

**தனுசு**
பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, தொழில் கூட்டாளிகளின் ஆதரவு கிடைக்கும்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**கும்பம்**
பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், போசன சுகமுண்டு.


**மீனம்**
ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**தவறான செயலுக்கு ஆலோசனை கூறுபவர்கள் துணையாய் வருவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரந்தன் சந்திப் பகுதியில் தடம்புரண்ட டிப்பர் வாகனம்

## ஒருவர் காயம்



(கண்டாவளை)

கிளிநொச்சி ஏ9 வீதியின் பரந்தன் சந்திக்கு அண்மித்த பகுதியில் டிப்பர் வாகனம் ஒன்று தடம் புரண்டதில் ஒருவர் காய மடைந்துள்ளார்

நேற்று காலை 5.40 மணியளவில் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சீமெந்து கல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தின் பின் சில்லு திடீரென காற்று போனதால் குறித்த டிப்பர் வாகனம் ஏ-9 வீதியின் நடுவே தடம் புரண்டு உள்ளது இதனால் டிப்பர் வாக னத்தில் பயணித்த ஒருவர் காய மடைந்துள்ளதுடன் ஏனை யோர் தெய்வாதினமாக உயிர் தப்பியுள்ளனர்.

விபத்து தொடர்பில் கிளி நொச்சி பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்து வருவதுடன் முன்டிக்கப்பட்டு இருந்த ஏ-9 வீதியுடான போக்கு வரத்துக்களையும் சீர் செய்து ள்ளனர். (நி-6-315)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பரமேஸ்வராக் கல் லூரி பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் எம்.வைத்திலிங்கம் எழுதிய "சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் வாழ்வு" என்ற நூல் வெளியீட்டு விழாவானது இன்று திங்கட் கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ஸ்ரீ.சற் குணராஜா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விரு ந்தினராக ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான அறங்காவலர் கலா நிதி ஆறுதிருமுருகன், சிறப்பு விருந்தினராக இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி.அம் பிகை சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(நி-6)




தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 42 ஆவது ஆண்டுவிழா நேற்று முன்தினம் மாலை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அமைந் துள்ள அன்னபூரணி மண்டபத் தில் துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர். கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் இடம் பெற்றது.

குறித்த இல்ல மாணவிகளின் கலை, ஆன்மீகம் சார் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் கல்விசார் செயற்பாடுகளில் மிளி ர்ந்த மாணவிகளுக்கு கௌரவிப்பும் வழங்கப்பட்டது.

(படம்-சிவசாந்தன்)

# காரில் கடத்திச் செல்லப்பட்ட 4 கிலோ 170 கிராம் தங்க கட்டி மீட்பு

## மூவர் கைது



(கண்டாவளை)

கிளிநொச்சிப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணி யளவில் சிறிய கார் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட நான்கு கிலோ 170 கிராம் தங்க கட்டி மீட்கப்பட்டதுடன் காரில் பயணித்த இரண்டு பெண்கள் உட்பட மூவர் கைது செய்ய ப்பட்டுள்ளனர்.

யாழில் இருந்து ஏ-9 வீதி வழி யாக வவுனியாவுக்கு குறித்த கார் ஒன்றில் தங்கம் கடத்தப்படுவது தொடர்பாக இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த விசேட தகவ ல்களின் அடிப்படையில் உடன டியாக விசேட அதிரடிப்படையி னருக்கு தகவல் வழங்கப்பட் டதையடுத்து கிளி நொச்சி கந்தசாமி ஆலயத்திற்கு அண்மி த்த பகுதியில் வைத்து வாகன த்தை சோதனையிட்ட விசேட அதிரடிப்படையினர் குறித்த தங் கத்தை மீட்டதுடன் சந்தேகத்தின் பெயரில் காரில் பயணித்த இர ண்டு பெண்கள் உட்பட மூவ ரைக் கைது செய்துள்ளனர்

இவ்வாறு கைது செய்யப்பட்ட வர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு ள்ளதுடன் குறித்த நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலை ப்படுத்துவதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு ள்ளன. (நி-6-100-315-316)

# காட்சிப்படுத்தப்பட்டுள்ள வாகன இலக்கத் தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்கு வரத்துத் திணைக்கள தலைமை அலுவலகத்திலிரு ந்து 2024.04.18 ஆம் திகதி யாழ். மாவட்ட காரியாலய அலுவலகத்திற்கு கிடைக்க ப்பெற்ற வாகன இலக்கத் தக டுகளின் பட்டியல், யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசசெயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக் களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பல கையில் காட்சிப் படுத்தப்பட்டு ள்ளது. மேலும் மாவட்டச் செய லக https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவே சிப்பதன் ஊடாக அல்லது 021 211 7116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதி யையும் நேரத்தையும் முற்ப திவு செய்து, அதற்காக தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தக வலுடன், புதிதாக வாகனங் களைப் பதிவு செய்த உரிமை யாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமைமாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற் றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என் பவற்றையும், யாழ் மாவட்ட மோட்டார் வாகனப் போக்கு வரத்து அலுவலகத்தில் குறிப் பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக் கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். மாவட்ட வாகன போக்குவரத்துத்திணை க்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பா ட்டில் யாழ்ப்பாணம் அறிவு த்திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப்பயிற்சிகள் சனிக்கி ழமை தொடக்கம் வெள்ளிக் கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை இல.81 பிறவுண்வீதி யாழ் ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்ப மாகும்.

எளியமுறை உடற்பயிற்சி கள், எளிய முறை குண்ட லினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் க.செல்வகுமார் வழங்குவார். மேலதிக தகவ ல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ளு மாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

# வன்முறை சம்பவத்தில் ஈடுபட்ட இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலி பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழை ந்து வன்முறையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது வீட்டின் கண்ணாடிகள் மற்றும் ஹயஸ் வான் என்பனவும் சேதமாக்க ப்பட்டுள்ளது.

அச்சுவேலி பகுதியில் உள்ள வீட்டிலேயே குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வன்முறையில் காய மடைந்த 70 வயதான முதி யவர் சிகிச்சைக்காக அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை அச்சு வேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 120 | 80-100 | 120 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 100 | 100 | 120 |
| தக்காளி | 100 | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 100 | 150 |
| கோவா | 150 | 180 | 200 | 150 | 200 |
| கரட் | 300 | 300 | 320 | 240 | 280 |
| பூசணி | 80 | 140 | 80 | 80-100 | 120 |
| புடோல் | 80 | 200 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 50 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 300 | 280 | 300 | 250 | 300 |
| பாகற்காய் | 350 | 300 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 150 | 60 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 100 | -- | 150 |
| பயற்றங்காய் | 200 | 160 | 200 | 150-240 | 100 |
| லீக்ஸ் | 300 | 220 | 280 | 220 | 250 |
| பீற்றூட் | 250 | 200 | 280 | 250 | 300 |
| கறிமிளகாய் | 300 | 300 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 800 | 500 | 400-700 | 600 |
| போஞ்சி | 250 | 300 | 300 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 50 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 80-100 | 100 |
| தேசிக்காய் | 700 | 600 | 500 | 520-800 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 110 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 450 | 300 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 700 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 60 | 90 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 200 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 120 | 100 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இத்தொகுதி அமைந்திருக்கும் காணி பல்கலைக்கழகத்திற்குரியது. பல்கலைக்கழகக் கட்டுமானங்களை மேற்கொள்வதற்கு வசதியாக இக்காணி பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டது. யுத்தத்தால் இக்கட்டடத் தொகுதி அழிந்திருந்தமையாலும், பாதுகாப்பு அணை முன்சென்றதாலும், காணி பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக இருந்ததாலும் அன்றைய துணை வேந்தர் பி.பாலசுந்தரம் பிள்ளையின் கோரிக்கையை ஏற்று கட்டடத் தொகுதி மீளளிக்கப்பட்டது.

குறுகிய காலத்தில் உடைந்த, பூர்த்தி செய்யப்படாத கட்டடங்கள் பூர்த்தி செய்யபப்பட்டு இவ்வலகு சிறப்பாக இயங்க வழிசமைக்கப்பட்டது. இவ்வலகின் முதலாவது இணைப்பாளராக திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரன் நியமிக்கப்பட்டார். மேலும் உடற்கல்விப் போதனாசிரியர்களான திரு.கே.கணேசானந்தனும் செல்வி.ஜெயானந்தகுமாரி கனகரெத்தினமும் விடுப்பில் உதவி விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டனர். எனினும் இவ்வலகை ஒரு பீடத்தில் சேர்ப்பதில் ஏற்பட்ட வாதப்பிரதிவாதங்களால் மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரமும் மாணவர் அனுமதியும் பின் தள்ளப்பட்டுக்கொண்டிருந்தன. இந்நிலையில் இவ் விளையாட்டு விஞ்ஞான அலகை இணைந்த விஞ்ஞான சுகாதார பீடம் தனது பீடத்துடன் சேர்ப்பதற்கு அனுமதி வழங்கியதாலும் துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராசாவின் முயற்சியாலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 2021 ஆம் ஆண்டு மாணவர்களை நேரடியாக அனுமதித்தது.

இதனால் விளையாட்டு விஞ்ஞான அலகின் மாணவர் அனுமதி தொடர்பான பிரச்சினைகள் தீர்வுக்கு வந்துள்ளன. இன்று இரண்டு பட்டதாரி அணி மாணவர்களும் ஒரு சுயநிதி டிப்ளோமா மாணவர்களும் இங்கு கல்வி பயில்கின்றனர். இவ்வலகின் முன்னாள் தலைவர்களாக கலாநிதி பவானி அகிலனும், கலாநிதி கேதீஸ்வரனும் கடமையாற்றினார்கள். இந்நாள் தலைவராக கலாநிதி எஸ்.சபாஆனந்தன் செயற்படுகின்றார். விளையாட்டு விஞ்ஞான அலகு டிப்ளோமா பயிற்சி பெற்றவர்களால் வடமாகாணப் பாடசாலைகளின் விளையாட்டுத் தரம், விளையாட்டு நிகழ்வுகளை கையாளும் திறன் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது.

### சித்த வைத்திய அலகு:

1983 இற்கு முன்னர் சித்த வைத்தியப் பிரிவு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சுதேச வைத்திய நிறுவனத்தின் ஒரு பகுதியாக இருந்துவந்தது. 1983 இல் இலங்கையில் ஏற்பட்ட பெரும் இனக் கலவரத்தின் பின்னர் சித்த வைத்தியப் பிரிவு மாணவர்களும், விரிவுரையாளர்களும் அகதிகளாக யாழ்ப்பாணம் வந்தனர். இந்நிலையில் சித்த வைத்தியத் துறையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்வாங்கி, கலைப்பீடத்தில் ஒரு துறையாகவும் ஏற்றுக்கொண்டது. கலைப்பீடத்தில் சித்த வைத்தியத் துறை இருப்பது அத்துறையின் வளர்ச்சிக்குப் பொருத்தமில்லை எனக் கருதிய மானிய ஆணைக்குழு அதனை ஓர் அலகாக மாற்றியது. இதன் வளர்ச்சிக்கு பேராசிரியர் டாக்டர்.எஸ்.பவானியின் பணி காத்திரமானது.

1984இல் இருந்து சித்த வைத்தியத் துறையை நிறுவனமாகத் தரம் உயர்த்த வேண்டும் எனப் பல தடவைகள் பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்குக் கோரிக்கைகளும் திட்டங்களும் முன்வைக்கப்பட்ட பொழுதும் அம்முயற்சி கைகூட வில்லை. பின்னர் பட்டப்படிப்பு கல்விப் பிரிவுக்கு நிறுவன அந்தஸ்து கொடுப்பதில்லை எனவும் பீடத்துக்கான புதிய அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் மானிய ஆணைக் குழு கோரியது. இந்நிலையில் சித்த வைத்திய பீடக் கோரிக்கையை திட்டமாகத் தயாரித்து பல்கலைக்கழகம் மானிய ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தது. இத் திட்டத்தில் 8 துறைகள் அமைக்க வேண்டும் என பிரேரிக்கப்பட்டிருந்தது

அவையாவன மூலதத்துவம் குணபாடம், நோய் நாடல், குழந்தை மகளிர் மருத்துவம், சிரோரோகம், சுரோரோகம்




அறுவை சிகிச்சை சமூக நல மருத்துவம் மனித உயிரியல் நஞ்சியல் பரம்பரை வைத்தியம்.

இந் நிலையிலும் இன்று வரை பீட அந் தஸ்து கிடைக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். இன்று கைதடியில் இயங்கும் சித்த வைத்திய அலகு பெருமளவான மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் கொண்டு கட்டமைப்பு வசதிகளுடன் காணப்படுகிறது. மேலும் இதனருகில் சித்த வைத்தியப் போதனா வைத்தியசாலையும் அமைந்துள்ளது. பல நிலைகளிலும் வளர்ச்சி காணப்பட்ட நிலையிலும் பீடம் கைகூடாதிருப்பது சித்த வைத்தியர்களுக்கும் மக்களுக்கும் கவலையளிப்பதாக உள்ளது. இன்றைய அலகின் தலைவர் டாக்டர்.விவியன் சத்தியசீலன் இவருக்கு முன்னர் டாக்டர், திருமதி. தி.திலீபன், டாக்டர்.சிவசண்முகராஜா, டாக்டர்.திருமதி.வி. பவானி, டாக்டர்.திருமதி.ஸ்ரீகந்தா, டாக்டர் திருமதி. பஞ்சராசா, டாக்டர்.குமுதரஞ்சன் இத் துறையில் தலைவர்களாக இருந்து மேம்படுத்தப் பல முயற்சிகள் எடுத்தனர்.

### புதிய பீடங்களுக்கும் துறைகளுக்குமான கோரிக்கைகள்.

பல்கலைக்கழகத்தில் சட்டம், கணனி, விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் கல்வி ஆகிய துறைகளின் மேம்பாட்டிற்கும் விரிவாக்கத்திற்கும் இத்துறைகளைப் பீடங்களாக மாற்றுவது அவசியம் எனக் கருதப்படுகின்றது. இத்துறைகள் பீடங்களாகத் தரமுயர்த்தப்பட்டால் அவற்றின் வளர்ச்சிகள் துரிதமாக்கப்படும். மேலும் இன்றைய தேவைகள் கருதி குற்றவியல், நீர்க் கற்கைகள், முன்பள்ளிக் கற்கை, முதியோர்சார் கற்கை ஆகியன பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

### ஆய்வுகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பித்த காலப்பகுதியிலிருந்து தரமான கல்விச் செயற்பாடுகளுடன் ஆய்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. இதற்குச் சிறந்த உதாரணம் ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சியில் கிடைத்த சான்றுகள். இன்றைய பேராசிரியர்களான எம்.ரகுபதி, பி.கோபாலகிருஷ்ண ஐயர், என்.சண்முகலிங்கம், செல்வி.வசந்தி அரசரட்ணம், எஸ்.சிவலிங்கராஜா, எஸ்.ரகுநாதன் ஆகியோர்களின் கலாநிதி பட்ட ஆய்வுகளும் அது சார்பான வெளியீடுகளும் பல்கலைக் கழக ஆய்வினதும் உயர்கல்வித் தரத்தையும் வெளிக்காட்டி நிற்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வாளர் பட்டியல் மிக மிக நீண்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வுகளில் இப்பிரதேசம் பற்றியும் பிரதேச மக்கள் சார்ந்த பல்வேறு விடயங்கள் பற்றியதாக இருக்கின்றன.

பல்கலைக்கழகத்தில் ஆய்வுகளை அதிகரிக்க வலுவூட்ட 1988 இல் துணைவேந்தர் பேராசிரியர் ஏ.துரைராசா யாழ்ப்பாண விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தை அமைத்தார்.

இச்சங்கம் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கச் செயற்பாட்டை ஒத்தது (SLAAS). யாழ்ப்பாண முன்னேற்றச் சங்கம் (JSA) வருடாந்த ஆய்வு மாநாடுகளை பல்கலைக்கழகத்திற்குள் தவறவிடாது நடத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்
யாழ்.பல்கலைக்கழகம்

1999 இல் துணைவேந்தர் பேராசிரியர் பி.பாலசுந்தரம்பிள்ளை காலத்தில் பட்டப்பின்படிப்புகள் பீடம் அமைக்கப்பட்டு ஆய்வுசார் பட்டப்பின் படிப்புக்கள் குறிப்பாக முதுமானி, முது தத்துவமானி, கலாநிதிப் பட்டப்படிப்புக்கள் நடைபெறுகின்றன. கல்வித் துறையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, முதுமாணி பட்டப் படிப்பு, முதுதத்துவமாணி, கலாநிதி முழுமையான ஆய்வு படிப்புக்களில் பெரும் எண்ணிக்கையானோர் பட்டம் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தமிழ், சைவ சித்தாந்தம், பண்பாட்டியல் கற்கை, பிரதேச அபிவிருத்தி, பொது நிர்வாகம், அபி விருத்தி கற்கை, குடிசனக் கற்கை ஆகிய பாடங்களில் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் முதுமாணி தகைமை பெற்றுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இக் கற்கை நெறிகள் யாவும் சுயநிதிக் கற்கைகள் ஆகும். மேலும் பல்வேறு பாடங்களில் முதுமாணி, முதுதத்துவமாணி பட்டங்களை பட்டப்பின்படிப்பு பீடத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் பட்டப் படிப்புக்களிலும் தற்போது படிப்படியாக ஆய் வுப்பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகள் (JUICE) 2012 இலும் 2016இலும் நடைபெற்றன. இம்மாநாடுகள் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிச் செயற்பாடுகளை வலுவூட்டின. இன்றைய துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராசாவின் அறிவுறுத்தலின் படி ஒவ்வொரு பீடமும் இரு வருடங்களுக்கு ஒருமுறை இம் மாநாடுகளை நடாத்தி வருகின்றது. இவ்வாய்வுகள் வழியாக இப்பிரதேசத்தின் பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் இதற்கான தீர்வுகள் பற்றியும் அறியக்கூடியதாகவுள்ளது.


மேலும் விஞ்ஞானபீடம், மருத்துவ பீடம், விவசாயபீடம் சர்வதேச பல்கலைக்கழகங்கள் நிறுவனங்களுடன் இணைந்து அவர்களுடைய நிதியுதவிகளுடனும் பெரிய அளவிலான ஆராய்ச்சிகள் முன்னெடுத்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் நொபேல் சுரேந்திரனின் ஆற்றலாலும் முயற்சியாலும் அமைக்கப்பட்டுள்ள நுளம்பு ஆராய்ச்சி மையம் இலங்கையிலேயே தனித்துவமானது. இதே போல் மருத்துவ பீடத்தில் பேராசிரியர் பீடாதிபதி சுரேந்திரகுமார், பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் விஞ்ஞான பீடத்தில் பௌதீகவியல் இரசாயனவியல் துறையினர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் சர்வதேச மட்ட ஆய்வுகள் இப்பல்கலைக்கழகத்திற்கு வலுச்சேர்த்து வருகின்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

### விசித்திரமான வடிவமைப்பால்
## வைரலான கார்



(வோஷிங்டன்)

உலகம் முழுவதும் சமூக வலைத்தளங்களின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், பயனர்களின் கவனத்தை ஈர்க்க இளைஞர்கள் பலரும் வித்தியாசமான செயல்கள் மற்றும் சாகசங்களை செய்து வீடியோ எடுத்து பதிவிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அமெரிக்காவின் சாலைகளில் விசித்திரமான வடிவமைப்புடன் சென்ற காரின் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில், கார் தலைகீழாக கவிழ்ந்து சக்கரங்கள் மேலே இருக்கும் நிலையில், காரை ட்ரைவர் வழக்கம் போல ஓட்டி செல்லும் காட்சிகள் உள்ளன.

சக்கரங்கள் மட்டுமின்றி கார் எண் உட்பட அனைத்துமே தலைகீழாக இருக்கும் நிலையில், பார்ப்பதற்கு தலைகீழாக கவிழ்ந்து கிடக்கும் காரை எப்படி ஓட்டி செல்கிறார்? என்று பயனர்கள் திகைப்படையும் வகையில் வீடியோ உள்ளது.

இன்ஸ்டாகிராமில் 36 லட்சத்திற்கும் அதிகமான பார்வைகளை பெற்ற இந்த வீடியோவை பார்த்த பயனர்கள் பலரும் தங்களது கருத்துக்களை பதிவிட்டனர்.

சில பயனர்கள், வித்தியாசமான வடிவமைப்பிற்காக கார் உரிமையாளரை பாராட்டினர்.

அதே நேரம் சில பயனர்கள், பொது மக்களை குழப்பும் இது போன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பதிவிட்டனர். (நி-6)

# உக்ரைனின் அனல்மின் நிலை…
# ரஷ்யா சரமா…

- 4 அனல்மின் நிலை…
- பல நகரங்களில் ம…

(கீவ்)

**உக்ரைன் நாட்டின் மீது நேற்று முன்தினம் சனிக்கி… அனல்மின் நிலையங்களை இலக்கு வைத்து ரஷ்ய… ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியதாக… ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

அந்த நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் மற்றும் மேற்கு பகுதியில் உள்ள இவானோ-பிராங்கிவ்ஸ்க் நகரங்களை குறிவைத்து 30இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை ரஷ்யா வீசியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவற்றில் சுமார் 20 ஏவுகணைகளை நடுவானில் இடைமறித்து அழித்ததாகவும் உக்ரைன் இராணுவம் அறிவித்துள்ளது.

அந்த நகரங்களில் உள்ள அனல்மின் நிலையங்களை இலக்காக வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதில் 4 அனல்மின் நிலையங்கள் கடுமையாக சேதம் அடைந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக உக்ரைனின் மின் உற்பத்தி நிலையங்களை குறிவைத்து ரஷ்யா தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இதனால் உக்ரைனின் பல நகரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இலட்சக்கணக்கான மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவின் தொடர் எச்சரிக்கைகளை மீறி, நேட்டோ அமைப்பில்

# பதவி விலகினார்
# வியட்நாம் சபாநாயகர்
### பின்னணியில் ஊழல் குற்றச்சாட்டு

(வியட்நாம்)

வியட்நாம் பாராளுமன்றத்தின் சபாநாயகர் வூங் டின் ஹியூ நேற்று முன்தினம் பதவி விலகியுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை கருத்தில் கொண்டு, தாமாகவே குறித்த பதவியில் இருந்து விலக வூங் டின் ஹியூ தீர்மானித்துள்ளார்.

67 வயதுடைய வியட்நாம் பாராளுமன்றத்தின் சபாநாயகர் பதவி விலகியுள்ளமை அந்த நாட்டின் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



வியட்நாம் பாராளுமன்றத்தின் சபாநாயகர் வூங் டின் ஹியூ மீது அதிகார துஷ்பிரயோகம், ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இதற்கிடையே, அவரது உதவியாளர் பாம் தாய் ஹா, ஊழல் குற்றச்சாட்டில் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், தற்போது வூங் டின் ஹியூ தனது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். (நி-6)

# 60 வயதில் 'மிஸ் …

(ஆர்ஜென்ரினா)

மிஸ் யுனிவர்ஸ் அழகி போட்டியில் முதல் முறையாக 60 வயதான அலெஜான்ட்ரா மரிசா ரோட்ரிக்ஸ் என்ற வழக்கறிஞர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மிஸ் வோர்ல்ட், மிஸ் யுனிவர்ஸ் உள்ளிட்ட உலக அழகிப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த அழகிப் போட்டிகளில் இளம் பெண்கள் மட்டுமே அதிகம் பங்கேற்கிறார்கள். அப்படியான பெண்களையே வெற்றியாளர்களாக அறிவிக்கிறார்கள்.

ஆனால், ஆர்ஜென்ரினாவில் உள்ள பியூனஸ் அயர்ஸில் நடந்த மிஸ் யுனிவர்ஸ் போட்டியில் அதிக வயதுடைய பெண் வென்று சாதனை படைத்துள்ளார்.

முதன்முறையாக, 60 வயதான வழக்கறிஞர் ஒருவர் மிஸ் யுனிவர்ஸ் பியூனஸ் அயர்ஸ் அழகிப் போட்டியில் வென்று சாதனை படைத்துள்ளார்.

இந்தப் போட்டியில் 18 முதல் 73 வயதுடைய 34 பேர் போட்டியிட்டனர். அவர்களுடன் போட்டியிட்டு அலெஜான்ட்ரா மரிசா ரோட்ரிக்ஸ் பட்டத்தை வென்றுள்ளார்.

பள்ளிப் படிப்பை முடிந்த ரோட்ரிகுயஸ், தனது தொழிலாக முதலில் பத்திரிகைத்துறையைத் தான் தேர்ந்தெடுத்தார் என்று நியூயோர்க் போஸ்ட் தெரிவித்துள்ளது. பின்னர், அவர் சட்டம் படித்து ஒரு மருத்துவமனையின் சட்ட ஆலோசகரானார்.

தற்போது ஆர்ஜென்ரினா தலைநகர் புவெனஸ் அயர்ஸ் மாகாணத்திற்கான பிரபஞ்ச அழகியாக 60 வயதில் அவர் தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# லையங்களை குறிவைத்து

# ரித் தாக்குதல்

## லையங்கள் சேதம்

## மின்சாரம் துண்டிப்பு

க்கிழமை இரவில்
ஷ்யா சரமாரியாக
ாக வெளிநாட்டு



இணைவதற்கான முயற்சிகளை உக்ரைன் முன்னெடுத்ததால் அந்த நாட்டின் மீது கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ரஷ்யா போர் தொடுத்தது.

இந்தப் போரில் அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்தேய நாடுகள் உக்ரைனுக்கு தேவையான இராணுவ மற்றும் நிதி உதவிகளை வழங்கி பக்கபலமாக இருந்து வருகின்றன.

இதன் மூலம் உக்ரைன், ரஷ்யாவை எதிர்த்து தொடர்ந்து சண்டையிட்டு வருவதுடன் ரஷ்யாவும் இலக்கை எட்டும் வரையில் பின்வாங்க போவதில்லை என கூறி போரை தொடர்ந்து வருகிறது.

இதன் காரணமாக இரு நாடுகளுக்கு இடையிலான போர் தொடர்ந்து உக்கிரமடைந்து வருகிறது.

தற்போதைய போரில் ரஷ்யா வசம் உள்ள உக்ரைன் நகரங்களை மீட்பதற்காக உக்ரைன் இராணுவம் சண்டையிட்டு வருவதுடன் அதே சமயம் உக்ரைனின் மற்ற நகரங்களை கைப்பற்றும் நோக்கில் ரஷ்யா தனது தாக்குதல்களை விரிவுபடுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சீனாவுக்கு எதிரான இந்தியாவின் நகர்வு

## இராணுவத்தில் இணைக்கப்பட்ட அதி பயங்கர ஆயுதம்



(டில்லி)

அருணாச்சல பிரதேச எல்லைகளில் சீனா அதிக அளவு படைகளை குவித்துள்ள நிலையில் இந்தியா வானது அதிரடி தீர்மானமொன்றை எடுத்துள்ளது.

இந்திய இராணுவத்தால் உருவாக்கப்பட்ட அதி சக்தி வாய்ந்த ரேம்பேஜ் என்ற ஏவுகணையை தனது விமானப்படைகளிலும் கடற்படைகளிலும் இந்தியா இணைத்துள்ளது.

குறித்த ஏவுகணையானது 250 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் இலக்கை கூட துல்லியமாக தாக்கக் கூடிய திறன் கொண்டது.

அத்தோடு, இது ஒலியை விடவும் இரண்டு மடங்கு வேகத்தில் பயணித்து இலக்கை தாக்கும் எனக் கூறப்படுகிறது.

புதிதாக சேர்க்கப்பட்ட இந்த ஏவுகணையினால் இந்திய விமானப்படை மற்றும் கடற்படையின் திறன் மேலும் அதிகரிக்கும் என்று அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ரேம்பேஜ் ஏவுகணை சுகோய்-30 எம்கேஜ மற்றும் மிக்-29 ஆகிய போர் விமானங்களில் பயன் படுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

# யுனிவர்ஸ்' பட்டம்




ந்தெடுக்கப்பட்டு சாதனை படைத்துள்ளார்.

அவருக்கு பல்வேறு தரப்பினரும் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

முன்னதாக, அழகிப் போட்டியில் மரிசா ரோட்ரிக்ஸ் வெளிப்படுத்திய நேர்த்தியும், நளினமும் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

இந்த வெற்றிக்கு பின் பேசிய அவர், "அழகுப் போட்டிகளில் அதிக வயதில் வென்றவர் என்ற முன்னுதாரணத்தை ஏற்படுத்தியதில் நான் மகிழ்ச்சிகொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். (நி-6)

# செங்கடலில் தொடரும் பதற்றம்


## பிரிட்டன் கப்பல் மீது ஹவுதி தாக்குதல்

(லண்டன்)

செங்கடல் வழியாக சென்ற "ஆண்ட்ரோமேடா ஸ்டாரர" என்ற பிரிட்டன் எண்ணெய் கப்பல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதாக ஹவுதி இராணுவத்தின் செய்தி தொடர்பாளர் யாஹ்யா சரேயா அறிவித்துள்ளார்.

குறித்த தாக்குதலானது கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டமையை அமெரிக்க இராணுவம் நேற்று முன்தினம் உறுதி செய்துள்ளது.

இதன்படி பிரிட்டனுக்கு சொந்தமான "ஆண்ட்ரோமேடா ஸ்டார்" கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 3 பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியதாகவும் இந்த தாக்குதலில் கப்பலுக்கு சிறிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அமெரிக்க இராணுவம் மேலும் தெரிவித்துள்ளது.




இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரில் ஏமன் நாட்டைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்தனர்.

அதன் எதிரொலியாக செங்கடலில் பயணிக்கும் இஸ்ரேல் ஆதரவு நாடுகளில் இருந்து வரும் சரக்கு கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




பேராதனைப்
பல்கலைக்கழகத்தால்
25.04.2024 அன்று
நடாத்தப்பட்ட பொது
பட்டமளிப்பு விழாவில்
எமது மகள்
செல்வி

## சூரியகுமாரன் அகிலா

அவர்கள்
B.A (இளமாணிப் பட்டம்)
பெற்றதையிட்டு
பாராட்டி வாழ்த்துவதோடு
அவர் மேலும் பல
பட்டங்கள் பெற்று இறை
ஆசியுடன் பல்லாண்டு
காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.

(223)

வாழ்த்துவோர்-
தந்தை – ஆழ்வாப்பிள்ளை சூரியகுமாரன் (ஓய்வு நிலை கிராம அலுவலர்)
தாய் – சசிகலா சூரியகுமாரன் (ஆசிரியர்)
மற்றும் குடும்பத்தினர்
"வளர்மதி", கரவெட்டி கிழக்கு


# தேசிய மட்ட பட்மின்ரன் போட்டி
## யாழ்.மாவட்டத்திற்கு வெள்ளிப்பதக்கம்




(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பட்மின்ரன் போட்டியில் பரபரப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி யாழ் வீரர்கள் இரண்டாவது இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

40வயதிற்கு மேற்பட்டோருக்கான தேசியமட்ட பட்மின்ரன் போட்டிகள் நுவரெலியா உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தில் இருக்கும் தென்னிலங்கை வீரர்களை எதிர்த்து யாழ்.மாவட்ட வீரர்களான காண்டீபன் மற்றும் அன்ரனி ஆகியோர் மோதினர்.

3 செற்கள் கொண்ட போட்டியில் யாழ் மாவட்ட வீரர்கள் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் 2:1 என்ற செற்கணக்கில் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினர்.(நி-6-90)



முல்லைத்தீவு குமுழமுனை கிராமத்தில் முழவம் கலையகத்தினால் அமரர் கந்தப்பிள்ளை சண்முகத்தினால் தொகுக்கப்பட்ட நாட்டார் பாடல்கள் இறுவட்டு வெளியீட்டு விழா நேற்று முன்தினம் குமுழமுனை மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்: சதீஸ்)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3102

### கௌசிகன்

அடிக்கிற வெய்யிலுக்கு ஸ்கூல் காலேஜீக்கு எல்லாம் சம்மர் லீவு விடுகின்ற மாதிரி



வேலைக்கு போறவங்களுக்கும் ஆபிஸ் லீவு விட்டால் என்னவாம் ஆபிஸ் நிர்வாகம் : சம்பளத்தில் பிடிப்போம் பரவாயில்லையா?

### அனோஜன்



அது எப்படிடா வேலைக்கு போகாமல் வீட்டுல இருக்கிறவன் எல்லாம் I phone வைத்திருக்கிறான்.

### ஐரின்


பக்கத்து வீட்டுக்காரன் செத்தால் அவன் பேய்



நம்ம வீட்டில் யாராவது செத்தால் அவங்க சாமி
என்னடா நியாயம் இது

### டிபிஷா

அம்மா அது மனிதனா?
இல்லடா அது சோளக்காட்டு பொம்மை
அது எப்படிமா உறுதியாக சொல்லுறாய்



போன நோன்டாமல் இருக்கிறதை பாரு

### கோபிகா

ஒன்னு தெரிஞ்சுகொள் AC வைத்தால் Room மட்டும் தான் cooling ஆகும்



இதுவே மரத்தை நட்டு வைத்தால் ஊரே Cooling ஆகும்

### கனுசிகா

விதி விளையாடுது என்று சொன்னால்



ஸ்கோர் எவ்வளவு என்று கேட்கிறான் சேர்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெள்ளரி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name- Cacums satlus

Family- CaCurbitaceae

உரோமங்களையுடையதுடன் சராசரி பருமனை உடையதுமான ஒரு கொடித்தாவரமாகும். தனியிலை, ஒன்றுவிட்ட இலையமைப்பு கொண்டவை. 11 தொடக்கம் 16 சென்ரிமீற்றர் நீளமும் 14 செ.மீ அகலும் உடைய கோள வடிவ, இருதய வடிவ கூரிய முனைகளையுடைய இலைகளினைக் கொண்டது.

இலையின் இரு பக்கங்களிலும் சுனைகளை உடையது. இலைக் காம்பு 5 தொடக்கம் 8 செ.மீ நீளமுடையது. பூக்கள் ஒரு பாலானவை. அவை பிரகாசமான மஞ்சள் நிறம் கொண்டவை. நீள் வட்டவடிவான பெரிய பழங்களை தரும் விதைகள். தட்டையான வெள்ளை நிறமானவை. இவ் விதைகள் கிட்டத்தட்ட 6 மில்லி மீற்றர் நீளமானவை.

**இனவிருத்தியும் பரம்பலும்**

யாழ். மாவட்டத்தில் தோட்டப் பயிராக பயிரிடப்படுகிறது. விதைகள் மூலம் இன விருத்தி செய்யலாம். தை முதல் சித்திரை காலப்பகுதியிலும் ஆனி முதல் புரட்டாதி காலப் பகுதியிலும் இன விருத்தி செய்யப்படுகிறது.

**மருத்துவ பயன்கள்.**

வெள்ளரிப் பிஞ்சு காயை முற்றினாலும் கடித்து தின்ன சுவையாக இருக்கும். தாகத்தை அடக்கும் குளிர்ச்சியை தரும். உணவை எளிதில் ஜீரணம் செய்யும், பசியை தூண்டும். வெள்ளரிப் பிஞ்சு சிறு சிறு துண்டுகளுடன் உப்பு, மிளகாய் பொடி சேர்த்து உண்ணலாம். நீர்சுருக்கை குணமாக்கும். வெள்ளரி பழத்திலிருக்கும் தசைப் பகுதியை விதையை நீக்கி நசுக்கி சாறெடுத்து அதனுடன் உப்பு அல்லது சக்கரையும் மோரும் கலந்துண்ண தாகம் தணிந்து புத்துணர்ச்சி உண்டாகும்.

**உடல் பலவீனத்திற்கு**

வாதுமை பருப்பு,வெள்ளரி விதை பருப்புக்களை சூடான பாலில் போட்டு ஊறவைத்து தேன் சேர்த்து இளஞ் சூடான பதத்தில் அருந்தி உண்ண வேண்டும். வெள்ளரி இலையை சீரகத்துடன் கலந்து வறுத்து பொடி செய்து சிட்டிகை உட்கொள்ள தொண்டையில் உண்டாகும் நோய்கள் போகும். சர்க்கரை சேர்த்து உண்ண சிறுநீரை பெருக்கும்.

**வெள்ளரிக்காயில் உள்ள சத்துக்கள்**

புரதம்-0.4 கிராம்,கொழுப்பு-0.1 கிராம்,காபோவைதரேற்று-2.5 கிராம், நார்ப்பொருள்-0.4 மில்லிகிராம், கல்சியம்-10 மில்லிகிராம், பொஸ்பரஸ்-25 மில்லிகிராம், இரும்புச்சத்து-1.5 மில்லி கிராம், தயமின்-0.03 மில்லி கிராம், தியாசின்-0.2 மில்லிகிராம், சோடியம்-7 மில்லிகிராம்,பொட்டாசியம்-5.0 மில்லி கிராம்,தாம்பிரம்(செப்பு) 0-0.1 மில்லி கிராம்,நைட்ரஜன்-0.06 .

வெள்ளரிப் பிஞ்சை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி தயிர் பச்சடியில் சேர்த்தோ மோரில் போட்டு தாளித்தோ அருந்தலாம்.

வெள்ளரிக்காயை மிக்சியில் அடித்து மென்பானமாக அருந்தி வர இரத்தத்திலுள்ள உஷ்ணத்தை குளிர்மையாக்கும். மலச்சிக்கலை நீக்கும். இதன் சாறு வயிற்று புண்ணை ஆற்ற வல்லது. இதில் 96.3 வீதம் நீர்ச்சத்து உள்ளதால் வயிற்றெரிச்சலை உடனடியாகக் குணமாக்க வல்லது.

வெள்ளரிக்காயை வெட்டி தினமும் முகத்தின் மீது பூசி வந்தால் முகத் தோலின் வரட்சி நீங்கும். முகப்பருக்கள் வராமல் தடுக்கும். தேமல் நீங்கும். முகம் பளபளப்பாகும்.

வெள்ளரிக்காய் சாறு, கரட்சாறு, பசளிக்கீரை சாறு மூன்றையும் சம அளவு கலந்து சீனி சேர்த்து கரைத்து (மொத்தமாக 300 மில்லிலீற்றர் சாறுக்கு 150 கிராம் சீனி) அடுப்பில் வைத்து பானமாக தயாரித்து காலை, மாலை 5 தேக்கரண்டி அளவில் சாப்பிட்டால் முடி உதிர்தல் நின்று முடி வளரும்.

தோலில் அடிக்கடி அரிப்பு ஏற்பட்டு கொப்புளங்கள் உண்டாகும். இவற்றை நிரந்தரமாக குணமாக்க வெள்ளரிக்காய் சாறு, அறுகம்புல் சாறு, கரட்சாறு மூன்றையும் சம அளவு கலந்து தினமும் ஒரு வேளை குடித்து வரலாம்.

வாந்திபேதி முதலியன ஏற்பட்டு உடலில் நீர்ச்சத்து குறையும் சமயத்தில் வெள்ளரிக்காய் சாறும், இளநீரும் சம அளவு கலந்து ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை 30 மில்லி லீற்றர் + 60 மில்லி லீற்றர் வரை அருந்தலாம்.

பேரீச்சம்பழத்தையும், வெள்ளரிப் பழத்தையும் சேர்த்து கலந்துண்ண மருத்துவ குணம்மிக்க கலவையாகும். பேரீச்சம்பழம் உடலில் உஷ்ணத்தை உண்டாக்கும். வெள்ளரிக்காய் உடலில் குளிர்ச்சியை உண்டு பண்ணும்.

35 கிராம் வெள்ளரி விதைகளை நன்றாக அரைத்து 175 மில்லிலீற்றர் நீரில் கலந்து வடிகட்டி 30 மில்லிலீற்றர் அளவு தினமும் 3 வேளை குடிக்க சிறுநீரக கற்கள் கரைந்து சிறுநீர் நன்கு வெளியேறும். தொடர்ந்து 40 நாட்கள் இவ்வாறு பயன்படுத்தி வரலாம்.

தோல் நீக்கிய பாதாம் பருப்பு ஒரு தேக்கரண்டி, வெள்ளரி விதை ஒரு தேக்கரண்டி, 100 மில்லிலீற்றர் பாலில் கலந்து 30 நாட்கள் அருந்திவர தாதுக்கள் கெட்டியாகி உடல் பலம் பெறும்.

**வெள்ளரி பழ சர்பத்**

வெள்ளரி பழங்களை கழுவி வாயகன்ற பாத்திரத்தில் இட்டு கைகளில் நன்கு பிசைந்து எடுத்து பிசைந்த சாற்றை இறக்கி கொண்டு விதைகளை நீக்கி சாற்றை வடித்து, வடித்த சாற்றுடன் சம அளவு சர்க்கரை சேர்த்து அடுப்பில் வைத்து காய்ச்சி பாகுப்பதம் வந்ததும் இறக்கி சுத்தமான சீசாவில் ஊற்றி கொள்ளவும்.

இந்த சர்பத்தில் 3 தேக்கரண்டி அளவு எடுத்து ஒரு டம்ளரில் விட்டு அதேயளவு தண்ணீர் ஊற்றி பாதாம் பிசினை ஊற வைத்து சர்பத்தில் 516 தண்டுகளை போட்டு ஒரு மூடி எலுமிச்சம் சாறு பிழிந்து தேவையானால் ஐஸ்கட்டி போட்டு பருகவும். இவ்வாறு தொடர்ந்து 3 நாட்கள் கொடுக்க உடல் உஷ்ணத்தை தணித்து பித்த நோய்களை நீக்கி உடலுக்கு பாதுகாப்பை கொடுக்க வல்லது.

# இன்று ஒரு தகவல் 108



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## வாய்ச்சவடால்

இந்த வானத்தையே வில்லாக வளைக்க வேண்டுமா? அது என்னால் முடியும் சேர்! இப்படிச் சொல்லுகிறவர்களுக்கு என்ன பெயர் தெரியுமா? வாய்ச்சவடால் பேர்வழிகள் என்று பேர். ஊரை வளைத்து வார்த்தையாலே பந்தல் போட்டு விடுவார்கள். ஆனால் காரியத்தை எப்படி என்று பார்த்தால் பைசாவுக்கு பிரயோசனம் இருக்காது.

இப்படிப்பட்டவர்கள் நிறைய பேர் உண்டு ஊர் உலகத்திலே அப்படிப்பட்ட மூன்று பேர் ஒரு ஊரில் இருந்தார்களாம். என்னுடைய கண்பார்வை மிகவும் கூர்மை என்றான் ஒருத்தன்.

என்னுடைய கண்பார்வை உங்க இரண்டு பேர் பார்வையைவிட கூர்மையானது. எவ்வளவு தூரத்திலே எது இருந்தாலும் அதை என்னால் பார்த்துவிட முடியும் என்றான். மூன்றாவது ஆள்.

இந்த மூன்று பேருமே வாய்ச்சவடால் பேர் விழிகள். ஊரிலே போறவர்கள் வருகிறவர்களையெல்லாம் கூப்பிட்டு வைத்து அளந்து கொண்டேயிருந்தார்கள்.

இவர்களோட அலட்டல் நாளுக்கு நாள் அதிகமாய் போய்ச்சு.

ஜனங்களாலே இதை சகிச்சிக்க முடியவில்லை.என்ன செய்வது என்று யோசித்தார்கள். ஒரு முடிவுக்கு வந்தார்கள்.அந்த ஊர்க்காரர்கள் இந்த மூன்று பேரையும் கூப்பிட்டு ஒரு இடத்திலே உட்கார வைத்தார்கள்.

இதோ பாருங்கள். நமது ஊரிலே புதுசா கட்டியிருக்கிறோமே கோயில், அதோட கோபுரத்து உச்சியில் கலசம் வைப்பதற்காக ஒரு பீடக்கல் நாளைக்கு உயரே ஏத்திக் கொண்டு போய் வைக்கப்போகிறோம். அந்த கல் மேலே ஒரு சாசனம் பொறிக்கப்போகிறோம். நீங்கள் இங்கேயிருந்தே அதிலே என்ன எழுதியிருக்கின்றது என்று படித்து சொல்ல வேண்டும். முடியுமா உங்களாலே என்றார்கள். முடியும் என்றார்கள் இவர்கள்.

கூட்டம் கலைந்தது.

இந்த மூன்றுபேரும் என்ன செய்தார்கள் தெரியுமா? ஒருத்தனுக்குத் தெரியாமல் ஒருத்தன் அந்த கல்லை செய்த சிற்பியைத் தேடிக் கொண்டு போனார்கள். முதலில் ஒருத்தன் போய்ச் சேர்ந்தான்.

ஐயா .. அந்த கோபுர கலசத்துக்கு அடியிலே வைக்கப்போகின்ற கல்லிலே ஏதாவது எழுதியிருக்கா என்று விசாரிச்சான்.

அன்பே சிவம் என்று எழுதியிருக்கு என்றார் அவர்.

இந்தாங்க ஒரு ஐநூறு ரூபா. என்று சொல்லி அவர் கையிலே பணத்தை வைத்துவிட்டு போய்விட்டார்.

அதன்பின்பு இரண்டாவது ஆள் வந்து சேர்ந்தான். உச்சிக் கல்லிலே என்ன எழுதியிருக்கின்றீர்கள் என்று விசாரித்தான். அன்பே சிவம் என்று எழுதியிருக்கு என்றார் .

வேறு ஒன்றுமில்லையா என்றான். சொன்னவர் திருமுலர் என்று கீழே எழுதியிருக்கு என்றார். இந்தாங்க ஆயிரம் ரூபா என்று கொடுத்துவிட்டு அவனும் போய்விட்டான்.அடுத்தவன் வந்தான் விசாரித்தான். அன்பே சிவம் சொன்னவர் திருமூலர் என்று எழுதியிருக்கு என்று இவர் சொன்னார்.

அதற்குக் கீழே ஏதாவது எழுதியிருக்கா என்று கேட்டான்.

உபயதாரர் உலகநாதன் என்று சின்னதா எழுதியிருக்கு என்றார்.

இந்தாங்க 1500 ரூபா என்று கொடுத்துவிட்டு போய்விட்டான் மறுநாள்.

அந்த கோபுரத்துக்கு முன்னாலே எல்லாரும் கூடியிரு க்கின்றார்கள். இந்த மூன்றுபேரும் மிகவும் அலட்சியமாக வந்து நின்றார்கள்.

முதல் ஆள் நிமிர்ந்து பார்த்தான். கோபுரத்தை. அன்பே சிவம் என்று எவ்வளவு அழகாக எழுதியிருக்கு பாருங்க சார் என்றான்.

உன் கண்ணுக்கு அவ்வளவு தான் தெரிந்ததா? அதற்குக் கீழே சொன்னவர் திருமூலர் என்று எழுதியிருக்கே அது தெரியவில்லையா என்றான் இரண்டாவது ஆள்.

மூன்றாவது ஆள் வந்தான். உங்கள் கண்பார்வை அவ்வளவு தானா? அதற்கும் கீழே சின்ன எழுத்திலே உபயதாரர் உலகநாதன் என்று எழுதியிருக்கே. அதுகூட என் கண்ணுக்கு பளிச்சென்று தெரியுது. என்றான்.மூன்று பேரும் திமிருடன் சட்டை கொலரை தூக்கிவிட்டுக்கிட்டு நின்றார்கள்.

எப்படி நாங்கள் சொன்னது சரிதானா? வேணும் என்றால் மேலே ஏறிப்போய் பார்த்துவிட்டு வாங்க என்று வேறு சொன்னார்கள்.

மேலே ஏறிப்போய் பார்க்க வேண்டிய அவசியமில்லை. என்றார்கள் ஊர் ஜனங்க.

ஏன் என்று கேட்டான்இந்த மூன்று பேரிலே ஒருத்தன். அதற்கு அந்த ஊர் தலைவர் பதில் சொன்னான்.

ஏன் என்றால் அந்த சிலாசாசன கல்லை நாங்கள் இன்னும் கோபுரத்து உச்சிக்கு கொண்டு போகவில்லை. இன்னும் வேலை பாக்கியிருக்கு.

நாளைக்குத் தான் மேலே கொண்டு போய் வைக்கப்போகின்றோம் அப்படி என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 467



"இளவரசே! நான் ஒருவன் மட்டும் மரணகாயங்களுடன் ஓடி ஒளிந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டேன் நடந்தது என்ன வென்பதை யாருக்காவது சொல்ல வேண்டும் என்பதற்காகவே இதுவரையில் உயிரை வைத்துக் கொண்டிருந்தேன். இளவரசே! தங்களையே நேரில் பார்த்துச் சொல்லும் படியான பாக்கியம் எனக்குக் கிட்டி விட்டது. தங்களுக்கு நான் துரோகம் செய்ய எண்ணியதற்குப் பலனையும் அனுபவித்து விட்டேன். பொன்னியின் செல்வரே! என்னை மன்னித்து விடுங்கள்!" என்றான் கலபதி.

"கடமையை ஆற்றிய கலபதியே! உம்மை எதற்காக நான் மன்னிக்க வேண்டும்? போர்க்களத்தில் உயிரை விடும் வீரர்கள் அடையும் வீர சொர்க்கம் ஒன்று இருந்தால் அதற்கு நீரும் அவசியம் போய்ச் சேருவீர்! சந்தேகம் இல்லை!" என்று சொல்லி இளவரசர் அக்கலபதியின் தீயெனக் கொதித்த நெற்றியைத் தடவிக் கொடுத்தார்.

கலபதியின் கண்களிலிருந்து அப்போது பெருகிய கண்ணீர் அவன் முகத்தில் வழிந்திருந்த இரத்தத்தோடு கலந்தது. மிக்க சிரமத்துடன் அவன் தன் கைகளைத் தூக்கி இளவரசரின் கரத்தைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான். இளவரசரின் கரம் கலபதியின் கண்ணீரால் நனைந்தது. அவருடைய கண்களிலும் கண்ணீர் துளித்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் கலபதியின் உயிர் அவன் உடலை விட்டுப் பிரிந்தது.

### நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்

### கப்பல் வேட்டை

கலபதியின் உடலையும் மாண்டு போன மற்ற மாலுமிகளின் உடல்களையும் சேர்த்து உலர்ந்த மரக்கட்டைகளை அடுக்கித் தகனம் செய்தார்கள். தீ மூட்டி எரியத் தொடங்கிய போது இளவரசர் முகத்தில் கண்ணீர் பெருகிக் கொண்டிருப்பதைச் சேனாதிபதி பூதி விக்கிரம கேசரி கவனித்தார்.

"ஐயா! இந்தப் பாதகர்களின் சாவுக்காகவா கண்ணீர் விடுகிறீர்கள்? தங்களைச் சிறைப்படுத்த வந்த துரோகிகளுக்குக் கடவுளே தக்க தண்டனை அளித்து விட்டார். தாங்கள் ஏன் வருந்த வேண்டும்?" என்றார்.

"சேனாதிபதி! இவர்கள் துரோகிகள் அல்ல் இவர்களுடைய மரணத்துக்காகவும் நான் வருத்தப்படவில்லை. சோழ நாட்டுக்கு இவ்வளவு பொல்லாத காலம் வந்துவிட்டதே என்று வருந்துகிறேன்" என்றார்.

"பொல்லாத காலம் பழுவேட்டரையர்களுடனேயே வந்து விட்டது. இப்போது புதிதாக ஒன்றும் வரவில்லையே!"

"புதிதாகத்தான் வந்திருக்கிறது. கலபதியின் கட்டளையைக் கப்பல் மாலுமிகள் மீறுவது என்று வந்து விட்டால் அதைக் காட்டிலும் ராஜ்யத்துக்கும் கேடு வேறு என்ன இருக்க முடியும்? சேனாதிபதி! இது ஒரு சிறிய அறிகுறிதான்! இதைப் போலவே சோழ ராஜ்யம் எங்கும் பிளவுகள் ஏற்படுமோ என்று அஞ்சுகிறேன்! அப்படி ஏற்பட்டால் விஜயாலய சோழர் அஸ்திவாரமிட்ட இந்த மகாராஜ்யம் சின்னாபின்னமாகி விடுமே! இந்தக் கேடு என்னாலேயா நேரவேண் டும்? மகாபாரதக் கதை கேட் டிருக்கிறேன். துரியோதனன் பிறந்தபோது நரிகளும் ஓநாய்களும் பயங்கரமாக ஊளையிட்டன என்று பாரதம் சொல்லுகிறது. நான் பிறந்த போதும் அப்படி நரிகளும், நாய்களும் பயங் கரமாக ஊளையிட்டிருக்க வேண்டும்!" என்றார் இளவரசர்.

"ஐயா! தாங்கள் இந்த உலகில் ஜனித்தபோது என்னென்ன நல்ல சகுனங்கள் ஏற்படலாமோ அவ்வளவு ஏற்பட்டன. தங்கள் ஜாதகத்தைக் கணித்த சோதிடர்கள்."

"போதும், சேனாதிபதி! போதும்! இந்தப் பேச்சைக் கேட்டுக் கேட்டு என் காது புளித்துவிட்டது. என் ஜாதக விசேஷம் இருக்கட்டும். நாம் பிரிய வேண்டிய காலம் வந்துவிட்டது. சேனாதிபதி! தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (தொடரும்...)

---



# சிறுவர் அரங்கம்

## தானம் அளிப்பது சிறந்தது



மைசூரை ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவன் நீதியும், நேர்மையும் கொண்டவன். அன்பும், அருளும் நிறைந்தவன். அவன் ஒரு சமயம் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான்.

வழியில் வயதான விறகுவெட்டி ஒருவன் தலையில் விறகுகளை சுமந்தபடியே வந்தான். மன்னன் விறகுவெட்டியை பார்த்ததும் தள்ளாத வயதில் இவர் இப்படி கஷ்டப்படுகிறார் என்று வருந்தினான்.

பிறகு விறகு வெட்டியை பார்த்து, "ஐயா, உங்களுக்கு பிள்ளைகள் இல்லையா? இந்த வயதிலும் இப்படி பாடுபடுகிறீர்களே" என்று கேட்டான். அதற்கு விறகு வெட்டி அரசனை பார்த்து "ஐயா எனக்கு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் இப்போது என்னுடன் இல்லை. அவர்கள் தங்களுடைய மனைவிமார்களின் பேச்சை கேட்டு தனிக்குடித்தனம் போய்விட்டார்கள். இப்பொழுது வீட்டில் நானும் என் மனைவியும் மட்டும் தான் இருக்கிறோம்.

அதனால், இப்படி பாடுபடும்படி ஆகிவிட்டது" என்றான். இதை கேட்டதும் அரசன் அந்த விறகுவெட்டியின் துன்பத்தைப் போக்குவதற்கு தன் நாட்டில் உள்ள சந்தன காட்டின் ஒருபகுதியை அவனுக்கு தானமாக வழங்கினான்.

இதனால் விறகு வெட்டி பெரும் மகிழ்ச்சி அடைந்தான். விறகு வெட்டிக்கு தன்னுடைய சந்தன காட்டை நன்கொடையாக தந்ததில் அரசனுக்கு மிக்க மகிழ்ச்சி. ஏனெனில், கிழவனான அவன் சந்தன மரங்களை வெட்டி விற்பான்.

ஒவ்வொரு மரம் ஒரு லட்சம் விலை பெறும். அதைக் கொண்டு வீடு, நிலம் என்று வசதி எல்லாம் பெற்று சுகமாக இருப்பான் என்று எண்ணினான்.

அரசன் நினைத்த படியே விறகு வெட்டியும் நடந்து கொண்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தின் பெரும் பாகத்தைப் பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். - லா புருயர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாட்டில் தலைதூக்கவுள்ள வேலைநிறுத்தப் போராட்டங்கள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்புகள் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி வெளிவரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 2024 மே தினத்தில் தொழிற்சங்கங்களின் ஆர்ப்பரிப்புகள் உச்சம் தொடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் நாட்டில் மே தின ஊர்வலங்கள் அமைதியாக நடந்து முடிந்தன.

கொரோனாப் பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக மே தின ஊர்வலங்கள் மௌனித்திருந்தன.

ஆனால் 2024ஆம் ஆண்டில் மே தின ஊர்வலங்கள், தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் வலுப்பெறும் என்பது சர்வ நிச்சயம்.

இவ்வாறு மே தின ஊர்வலங்கள் உச்சமடைவதற்குக் காரணம் நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியாகும்.

ஆம், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பொது மக்கள் மிகுந்த கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

குறிப்பாக அன்றாடம் சீவனோபாயத்தை நடத்துவது கூட கடினம் என்றளவில் நிலைமை வந்துவிட்டது.

அதிலும் பொருளாதார நெருக்கடியால் அரச ஊழியர்களும் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் அவர்கள் தமது சம்பள உயர்வுக்காகப் போராட வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால், சீவியம் நடத்துவது மிகவும் கடினம் என்பதை ஒவ்வொரு அரச ஊழியரும் நடைமுறையில் அனுபவித்து வருகின்றனர்.

எனவே மே தினத்தில் அனைத்து தொழிற்சங்கங்களும் சம்பள உயர்வை முன்னிலைப்படுத்தி ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்தும் என்பது திண்ணம்.

இதற்கு மேலாக, 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடக்கின்ற காலப் பகுதியாக இருப்பதால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களிடம் இருந்து உச்சபட்ச உத்தரவாதங்களைப் பெற்றுக் கொள்வதில் தொழிற்சங்கங்கள் உறுதியாக இருக்கும் என்பது யதார்த்தமானதே.

ஆம், புதிய சம்பள உயர்வு மற்றும் ஏலவே உயர்த்தப்பட்ட சம்பள உயர்வில் நிலுவையாக உள்ளதை உடனடியாக வழங்குமாறு கோருவது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் மே தின ஊர்வலத்தில் நிச்சயம் ஒலிக்கும்.

இவ்வாறான கோரிக்கைகள் மே தினத்தில் ஒலிக்கும்போது, அவற்றை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தமது உறுதிமொழிகளையும் உத்தரவாதங்களையும் வழங்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகுவர்.

அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகவே வேலைநிறுத்தப் போராட்டங்களும் தாராளமாக நடக்கக்கூடிய வாய்ப்புள தெரிகிறது.

இதற்கு மகுடம் சூட்டுவதுபோல எதிர்வரும் மே தினம் அமையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆக, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னோடியாக மே தின ஊர்வலம் அமைவதுடன் வேலைநிறுத்தப் போராட்டங்கள் பற்றிய அறிவிப்புகளும் மே தினத்தின் விசேட செய்தியாக அமையக்கூடிய ஏதுக்கள் நிறையவே உண்டு.

## 174 வருடங்களின் பின் அதிகரித்த புவி வெப்பநிலை

# உலக வானிலை எச்சரிக்கை அமைப்பு

**(ஜெனீவா)**

**கடந்த 174 வருடங்களில் பதிவாகாத அளவில் இந்த வருடத்தில் புவியின் வெப்பநிலை அதிகரித்துள்ளதுடன் 65 ஆண்டுகளின் பின்னர் கடலின் வெப்ப நிலையும் அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் உலக வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது.**

2027ஆம் ஆண்டுக்குள், புவியின் சராசரி வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸுக்கு அதிகமாக உயர்வடைவதற்கு 66% வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெப்பநிலை வேகமாக அதிகரிக்கும் பட்சத்தில் பனிப்பாறைகள் உருகுவதும் அதிகரிக்கும் எனவும் கடல் மட்டமும் வேகமாக உயரக்கூடிய அபாயம் உள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் மே மாதம் வரையில் அதிகமான வெப்பநிலை பதிவாகும் எனவும், எல் நினோ உச்சத்தை அடைய வாய்ப்புள்ளதாகவும் அமெரிக்க தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த வெப்பநிலை உயர்வு என்பது எதிர்வரும் காலங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புவிக்கு எதிராக, அதன் வளங்களை அழிக்கும் அனைத்து நடவடிக்கைகளும் ஒரு தனி நபரிடமிருந்து ஆரம்பிக்கப்படுவது போன்று, புவி மாசடைவதை தடுக்கும் நடவடிக்கைகளும் தனி நபரிடமிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.

மனிதர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க புவியின் வளங்கள் குறைந்து கொண்டே செல்கின்றது.

உலகில் ஒவ்வொரு நாளும் 700இற்கும் அதிகமான சிறுவர்கள் உயிரிழப்பதாகவும், ஒரு கோடிக்கும் அதிகமான சிறுவர்கள் தீவிர மாசடைந்த பகுதிகளில் வாழ்ந்து வருவதாகவும் யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரியவந்துள்ளது.

புவியில் உள்ள வாயு, நீர் உள்ளிட்ட சகல வளங்களையும் நாம் பயன்படுத்தி வருகின்றோம். சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப எல்லையற்ற வளங்களும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டே வருகின்றன.

இந்த நிலையில் கால நிலை மாற்றம் போன்ற காரணிகளால் புவியிலுள்ள வளங்கள் மாசடையும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. புவியின் பாதுகாப்பிற்காக மாத்திரமின்றி மனிதனின் பாதுகாப்பிற்காகவும் அன்றாட வாழ்வில் சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இந்த நிலையில், எம்மை வாழ வைக்கும் புவி ஆரோக்கியமாக இருந்தால் தான், நாம் ஆரோக்கியமாக வாழ முடியும் என்பதைக் கருத்திற் கொண்டு, நிலம், நீர் மற்றும் காற்று மாசுபாட்டை குறைத்து, புவியைப் பாதுகாக்க உறுதியேற்க வேண்டும் என்று அமெரிக்க தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## 6 மில்லி கிராம் ஹெரோயினை உடமையில் வைத்திருந்தவர் கைது

(குருமன்காடு)

வவுனியா- ஓமந்தைப் பகுதியில் ஹெரோயின்போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தவகவலையடுத்து நேற்று ஏ-9 வீதி ஓமந்தைப் பகுதியில் இளைஞர் ஒருவரை வழிமறித்து சோதனையிட்ட வேளை இளைஞர் ஒருவரின் உடமையில் 6 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டது. இதனையடுத்து குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-6-250)

## அம்புலன்ஸ் சாரதிகளுக்கு பற்றாக்குறை

(கொழும்பு)

அரச வைத்திய சாலை அமைப்பில் அம்புலன்ஸ் சாரதிகளின் பற்றாக் குறை காணப்படுவதாக அரச சுகாதார சேவை அம்புலன்ஸ் சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அம்புலன்ஸ் சாரதிகளுக்கு சுமார் 300 வெற்றிடங்கள் இருப்பதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## பயணிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்திய பணியாளர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேசத்தில் வைத்து ஜேர்மனிய நாட்டின் சுற்றுலாப் பயணிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்திய ஹோட்டல் பணியாளர் நேற்று முன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியில் உள்ள விடுதி ஒன்றில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்கி நின்ற நிலையில் விடுதியின் மின்சாரத்தை துண்டித்தும்-சுற்றுலாப் பயணிகளின் அறைக் கதவுகளை வெளியே பூட்டியும் இடையூறு செய்தமை தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டே ஹோட்டல் பணியாளர் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-6-30)

## 45 லீற்றர் கசிப்புடன் சந்தேக நபர்கள் இருவர் கைது

(தருமபுரம்)

புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து யாழ். நோக்கி பயணித்த பேருந்து ஒன்றில் 45 லீற்றர் கசிப்புடன் சந்தேக நபர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கசிப்பு கடத்தப்படுவதாக தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக நேற்று குறித்த பேருந்தை மறித்து சோதனையிட்ட வேளை குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சந்தேக நபர்கள் இருவரை கைது செய்ய முற்பட்டபோது ஒருவர் தப்பித்து ஓட முயற்சித்த வேளை பொலிஸார் அந்த நபரையும் துரத்திப் பிடித்தனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வி.எம். சதுரங்க தெரிவித்தார். (நி-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

பகுதி IV

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

20

சில மாவட்டங்களில், ஒரு சில ஆண்டுகளுக்குள் காணிவரி இரு மடங்காயிற்று. எனினும் ஆரம்ப காலத்தில் அரசாங்க வருமானத்தின் குறைவினால் ஆள்பதிகள், விவசாயத்தை ஊக்குவிக்க பாரிய முயற்சிகளை கைக்கொள்ள முடியாமற் போயிற்று. பொருளாதார நிலை இடம் கொடுத்த அளவுக்கு நோத், மெயிற்லந்து, பிறவுண்றிக், பாண்ஸ், ஹோட்டன் ஆள்பதிகள் விவசாயத்தை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டினர்.

### கறுவா வியாபாரம்

ஆங்கிலேயர், கரையோர மாநிலங்களைக் கைப்பற்றிய பொழுது, நாட்டின் வருவாயின் பெரும்பகுதி கறுவா வியாபாரத்தினின்றே பெறப்பட்டது. இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடான பின்பும் கறுவா வியாபாரத்தில் ஏகபோக உரிமைகளைக் கிழக்கிந்திய வர்த்தக சங்கமே அனுபவித்து வந்தது. இவ்விடயத்தில் அரசாங்கத்துக்கும் கம்பனிக்குமிடையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

அரசாங்கம், ஆண்டுதோறும் 400,000 இறாத்தல் கறுவாவை கம்பனிக்குக் கொடுக்கவும், கம்பனி அரசாங்கத்துக்கு 60,000 பவுணைக் கொடுக்கவும் சம்மதித்தன.

மேற்கூறப்பட்ட உடன்படிக்கை 1822 இல் முடிவடைய, அரசாங்கம் கறுவா வியாபாரத்தைத் தானே மேற்கொண்டது. இந்நிலை 1833 வரை நீடித்தது. ஆங்கிலேயர், வியாபாரத் துறையில் ஏகபோக உரிமைகளை அனுபவித்தபோதும், அதில் படிப்படியாகக் கட்டுப்பாடுகளை நீக்கினர்.

தனி வியாபாரிகள் முதலில் வியாபாரத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்டும், பின்னர் ஊக்குவிக்கவும் பட்டனர். சேர். அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரன், வியாபாரத் துறையில் தனியார் முயற்சியை ஊக்குவித்தல், நாட்டுக்கு மாபெரும் நன்மைகளைப் பயக்கும் என்பதை நன்குணர்ந்தார்.

1810 இல் பிரித்தானிய உத்தியோகத்தினரல்லாதோர் நிலங்களை வாங்க அனுமதிக்கப்பட்டனர். 1812 தொடக்கம் ஐரோப்பியருக்குத் தலா 4,000 ஏக்கர் வீதம் நிலங்கள் விற்கப்பட்டன. 1832 இல் இவ்வுரிமை எல்லா இன மக்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இக்கட்டுப்பாடுகளின் நீக்கத்தினால் ஏற்பட்ட முதற் பயன் கோப்பிச் செய்கையின் விருத்தியில் காணப்பட்டது.

### கோப்பியின் எழுச்சி

கோப்பிச் செடியானது, ஆபிரிக்கா கண்டத்தின் சுதேசப் பயிர். 15 ஆம் நூற்றாண்டில் அராபியரும் துருக்கியரும், அச்செடியின் விதைகளினின்று கோப்பிப் பானத்தைத் தயாரித்தனரென்றும் அவர்கள் தாம், அப்பழக்கத்தை ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்றவர்கள் என்றும் பொதுவாக நம்பப்படுகிறது.

ஒல்லாந்தர், கோப்பிப் பயிரை ஜாவாவுக்கும் இலங்கைக்கும் அறிமுகப்படுத்தி, 1690 அளவில் அதனைக் காலியிலும் நீர்கொழும்பிலும் பயிரிட்டனர். ஆனால் கரையோர மாநிலங்களின் வெப்பச் சுவாத்தியத்தில் அப்பயிர் விருத்தியடையாமற் போகவே, அத்தோட்டங்கள் 1739 இல் மூடப்பட்டன. எனினும் சிங்களவர் மலைநாட்டில், விசேடமாக ஊவாப் பகுதியில் அச்செடியைச் செய்கை பண்ணி வந்தனர்.

அவர்கள் அச்செடியை, அதன் விதைகளுக்காகவன்று, கறிகளுக்கு நறுமணத்தை ஊட்டவல்ல அதன் இலைகளுக்காகவும், கோவில் வழிபாட்டுக்குப் பயன்பட்ட வெண்ணிற மலர்களுக்காகவுமே வளர்த்து வந்தனர்.

பிற்காலத்தில், கோப்பிக்கு ஐரோப்பியரின் கிராக்கி அதிகரிக்கவே, முஸ்லிம்கள் மலைநாட்டில் திரிந்து, கோப்பியைச் சேகரித்து, ஏற்றுமதிக்காகக் காலிக்கு அல்லது கொழும்புக்குக் கொண்டு சென்றனர். இச்சிறு விதமாக ஏற்றுமதி செய்யப்பட்ட கோப்பி, 1806 இல் 94,500 இறாத்தலிலிருந்து 1813 இல் 216,500 இறாத்தலாக அதிகரித்தது.

கண்டி இராச்சியம் வெற்றி கொள்ளப்பட்டபின், ஆங்கிலர், ஐரோப்பாவில் பெரிதும் வேண்டப்பட்ட அயனமண்டலப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு இலங்கை மிகவும் வாய்ப்பான குடியேற்ற நாடு என்பதை வெகு விரைவில் உணர்ந்தனர்.

இலங்கை பல இயற்கையான நற்பேறுகளைப் பெற்று விளங்கியது. அதன் மண்வளம் மிகுந்ததாகவும், சுவாத்தியம் ஆரோக்கியத்துக்குரியதாகவும், உஷ்ணமும் மழையும் நிறையப் பெற்றதாகவும் காணப்பட்டது. தீவின் மக்கள், அமைதியானவர்களாகவும், திருப்தியுடையவர்களாகவும், வியாபார நோக்குடன் வந்த பிறநாட்டவர் மட்டில் பகைமை காட்டாதவர்களாகவும் காணப்பட்டனர்.

அரசாங்கமும், தனியார் முயற்சிக்கு உதவியும் ஊக்கமும் அளிக்க ஆயத்தமாகவிருந்தது. நிலங்கள் குறைந்த விலைகளில் பெருமளவில் பெறத்தக்கனவாகவும் இருந்தன. தொழிலாளரைத் தென்னிந்தியாவினின்று சிரமமின்றி வரவழைப்பதற்கும் வாய்ப்புக்கள் இருந்தன. பாண்ஸின் முயற்சியினால் உள்நாட்டுக்கும் பிரதான துறைமுகங்களான காலி, கொழும்புக்குமிடையே நல்ல வீதிகள் அமைக்கப்பட்டிருந்தன.

பிரித்தானியர் ஆட்சியின் தொடக்க காலத்தில், கரையோர மாநிலங்களில், விவசாயத் தொழில்களை அமைப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. சீனி, கோப்பி பரீட்சார்த்தமாகப் பயரிடப்பட்டன ஆனால் கிடைத்த பயன்கள் சொற்பமானவை. கண்டியின் மலைப்பிரதேசங்களில் கோப்பி பயிரிட ஆரம்பிக்கப்பட்டதுடன் தான், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை முறை உதயமானது.

கோப்பிச் செய்கைக்கு முதல் வழியைக் காட்டியவர் ஆள்பதி பாண்ஸ் அவர்களேயாவர். கண்டி மாகாணங்களுக்கும், கரையோரத்துக்குமிடையே தெருக்களை அமைத்தபின், தான் திறந்த வீதியின் உபயோகத்தை நிரூபிக்கும் நோக்குடன் அவர், பேராதனைக்கு அண்மையில், நிலத்துண்டொன்றினை வாங்கி துப்பரவு செய்து கோப்பியைப் பயிரிட கங்காறுவா தோட்டத்தைத் திறந்தார்.

1824 இல், கம்பளையில் சின்னப்பிற்றியா எனும் தோட்டத்தை இராணுவ அதிகாரியான ஜோஜ் பேட் என்பவர் திறந்தார். சில மாதங்களுக்குள் சின்னப்பிற்றியா தோட்டத்தைச் சூழ ஒன்றன் பின் ஒன்றாகப் பல தோட்டங்கள் உண்டாயின.

கோப்பிச் செய்கையின் இவ்வாரம்ப காலம், ஒரு பரிசோதனைக் காலம் என்றே கருதப்படல் வேண்டும். ஆர்வம் மிகுந்த ஆங்கிலேயர் சிலர் மாத்திரம் தான் அதில் ஈடுபட்டு நின்றனர். 1827 இல் 10,000 அந்தர் கோப்பி இலங்கையினின்று ஏற்றுமதியாயிற்று.

### வைத்திய சேவை

பொதுசனங்களின் சுக நிலையைப் பேணிக் காக்கும் விடயத்தில் ஆங்கிலேயர் அக்கறை காட்டினர். ஆரம்பத்தில் வைத்திய சேவைகளைச் செய்வதற்கு இராணுவ நிலையமே பொறுப்பாயிருந்தது. 1798 இல் அம்மை நோய் உண்டான பொழுது, நோத், கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை எனுமிடங்களில் அம்மைநோய் வைத்திய நிலையங்களைத் திறந்தார். 1802 இல் அம்மைப் பால் குற்ற ஏற்பாடுகள் செய்து, மரண விகிதத்தைக் குறைத்தார்.

### சித்திரவதை, அடிமை முறை நீக்கம்

சிங்கள அரசர்கள், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் யாவரும் பாரிய குற்றங்கள் புரிந்தவர்களைச் சித்திரவதை செய்து, பல கொடூரமான வகைகளில் கொலை செய்யும் முறைகளைப் பின்பற்றினர். இவை மனித நாகரிகத்துக்கு ஒவ்வாதவையெனக் கண்ட பிரித்தானியர், அவற்றை முதல் கரையோர மாநிலங்களில் ஒழித்தனர். பின்பு கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிய பொழுது அம்முறைகள் மலை நாட்டிலும் ஒழிக்கப்பட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் பசிலின்...

வரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நான் நியமிக்கப்பட்டுள்ளது குறித்து பசில் ராஜபக்ஷ பெரும் ஆத்திரம் கொண்டுள்ளார்.

அதன் காரணமாக என்னை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குவதற்கு அவர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

எனினும் அவர் நினைப்பதைப் போன்று நான் ஒன்றும் சிறுபிள்ளை கிடையாது. நான் விஜயதாஸ ராஜபக்ஷ, அதுவும் சட்டத்தை நன்றாக அறிந்த நீதி அமைச்சர்.

அதேபோன்று பசில் ராஜபக்ஷ கூறுவதற்கு ஏற்ப ஆட நான் ஒன்றும் பொம்மையும் கிடையாது.

எனவே பசில் அவரால் முடிந்ததைச் செய்து கொள்ளட்டும். அதனை நீதிமன்றத்தில் சந்திக்க நான் தயாராகவே இருக்கின்றேன்.

அதேபோன்று சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு ஒன்று கூடியே என்னைப் பதில் தலைவராக நியமித்துள்ளது.

அந்த விடயம் சட்டபூர்வமாகவே நடைபெற்றுள்ளது. அதனையும் யாரும் கேள்விக்குட்படுத்த முடியாது என்றார். (ந-7,10)

## பெரமுனவின்...

பத்துடன் இருப்பதாக தெரியவருகிறது.

ஆனால், கட்சியின் தற்போதைய தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ இந்தத் தீர்மானத்தில் மகிழ்ச்சியடையவில்லை என்றும் அக்கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிந்தது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக போட்டியிடுவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் உறுதியளித்துள்ளதாக பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் கூறியதாகவும் பசில் தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும், நாமல் ராஜபக்ஷவின் தரப்பினர் இன்னமும் ரணிலுக்கான ஆதரவை வெளியிடவில்லை. முழுமனதுடன், ரணிலை வேட்பாளராக இவர்கள் இன்னமும் ஏற்கவில்லை.

இதனால் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் வரை உத்தியோகபூர்வ ஆதரவை வெளியிடுவதில்லை என்ற முடிவை பொதுஜன பெரமுன எடுத்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த வேண்டுமென அக்கட்சியின் சில உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால், கட்சிக்கான மக்கள் செல்வாக்கு குறைந்துள்ளதால் தேர்தலில் நிச்சயம் வெற்றிபெற முடியாது என பசிலிடம் வலியுறுத்தியுள்ள அக்கட்சியின் சில சிரேஷ்ட உறுப்பினர்கள், ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்பாளராக நிறுத்தினால் அனைத்து தரப்பு மக்களின் ஆதரவையும் பெற முடியும் .எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ந-7,10)

## இலவச...

அமைச்சின் செயலாளர் மாவட்ட செயலாளர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களை இலக்காகக்கொண்டு இந்த அரிசி மானியத்தை வழங்க அரசாங்கம் அண்மையில் தீர்மானித்துள்ளது.

அந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம் சில மாவட்டங்களில் விநியோகிக்கப்படும் அரிசி தரம் குறைந்ததாக காணப்படுவதோடு சில மாவட்டங்களில் அதே அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவதானம் செலுத்திய பிரதமர் தினேஷ் குணவர்தன, அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்னவிடம் இது தொடர்பில் ஆராயுமாறு பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-7,10)

## ஜனாதிபதி செய...

கள் மற்றும் விசா விண்ணப்பதாரர்களை இலக்கு வைத்து இந்த மோசடிகள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் பதவிகளை வகிப்பதாகக் கூறி, போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து மோசடியான முறையில் பணத்தைப் பெற்றுக் கொண்டமை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும்,

அவ்வாறான நபர்கள் தொடர்பில் 0715308032 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக ஜனாதிபதிய செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பிரசாத் சேனரத்திடம் அறிவிக்குமாறும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7,10)

## தமிழர்களின்...

நியச் செய்யவே நாம் இம்முறையை கையாள்கின்றோம் என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளர் யார் என்பது முக்கியமல்ல. வடக்கிலும் கிழக்கிலும் வாழுகின்ற தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகள் இந்த பொது வேட்பாளர் மூலம் உலகறியச் செய்யப்பட வேண்டும்.

தமிழர்கள் தங்களது பாரம் பரிய பூமியில் இறைமையோடு வாழ்ந்தவர்கள். அத்தோடு அவர்களுக்கு அவர்களது இறைமையை மீட்டுக் கொடுக்கும்வகையிலான சமஷ்டித் தீர்வினை இந்த பொது வேட்பாளர் முன்வைப்பார்.

தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான ஒரு களமாக நாங்கள் இந்த ஜனாதபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கான ஆதரவைக் கேட்போம்.

எங்கள் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே பொது வேட்பாளர் களமிறக்கப்படுவதைத் தமிழர்கள் பார்க்கின்றார்கள்.

இங்கு முக்கியமானது தமிழர்கள் தங்களது அபிலாஷைகளுக்கான அங்கீகாரத்தை இந்த பொது வேட்பாளர் மூலம் கோருகின்றார்கள் என அவர் தெரிவித்துள்ளார். (ந-7,10)

## மே 2 முதல்...

எடுக்கப்பட்டுள்ளதாக கல்விசாரா ஊழியர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

சம்பளம் அதிகரிப்பு உட்பட பல் வேறு கோரிக்கைகளை முன்வைத்து கல்விசாரா ஊழியர்கள் இந்த போராட்டத்தில் குதிக்கின்றனர். அரசாங்கத்தோடு நடத்திய பேச்சுவார்த்தைகள் சாதகமாக இல்லாததனால் இந்த முடிவுக்கு தாம் வந்துள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதன்படி, நாட்டிலுள்ள 17 அரசாங்க பல்கலைக்கழகங்களிலும், எதிர்வரும் இரண்டாம் திகதி முதல், வேலைநிறுத்தம் தொடரும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தினால், நாட்டிலுள்ள 17 அரசாங்க பல்கலைக்கழகங்களும் முற்றாக முடங்கும் நிலை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருந்தும் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர். (ந-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.04.28
சீட்டிழுப்பு இலக்கம் 5459
G 3 9 9 9 8 5
அத சம்பத G 9 9 8 5
சீட்டிழுப்பு இலக்கம் 0034
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.04.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1489
C 07 27 33 66 C
Double Chance 21213

மெகா பவர்
திகதி 28/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1807
G 09 36 55 66 77
86659

லக்கி 7 VIP
திகதி 2024.04.28
சீட்டிழுப்பு இலக்கம் 0285
B 4 6 9 1 7 1 B

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3701
சீட்டிழுப்பு திகதி 28.04.2024
V 12 24 40 46
V 38501
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.28
சீட்டிழுப்பு இலக்கம் 0768
விருச்சிகம் 06 14 22 53 விருச்சிகம்
58879 12

உத்தியோகபூர்வ முடிவுகள்
28.04.2024 வெற்றி வாரம் 167 பழுப்பு
C 6 5 3 5 0 2
47326 H
அடுத்த சுப்பர் ஜக்பொட 21,281,956.00
DLB

SUPER BALL
2433 28.04.2024 ஞாயிறு
48 57 68 70 K
95395
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,524,609.60
DLB

2024.04.28 வெற்றி வாரம் 4594
சனிதா
34 42 56 65 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,173,675.20
47620
DLB

சசிரி
வெற்றி வாரம் 470
2024.04.28
கபிலம்
20 26 40
07
ரூ 2,796,440/-
60571
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4145 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.04.28 தினம் ஞாயிற்றுக்கிழமை
04 19 57 59 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,944,320.80
900942
DLB

G 39 05 21 52 63
1609
மஞ்சள்
28.04.2024
ஞாயிறு
994703
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 519,733,735.40
DLB

ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 109,085,136.80
வெற்றி வாரம் : 2259
சீட்டிழுப்பு திகதி : 2024.04.28
அத கோடிபதி ADA KOTIPATHI
04 14 44 58 X
565077
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி

## கண்ணீருடன் தேடுகின்றோம்





அமரர் **பாலசுப்பிரமணியம் கவிராஜ்**

தாயின் மடியில்: 1994.05.16 இறைவன் அடியில்: 2019.04.29

எங்கள் ஆருயிர்க் கவியே!
எங்கு சென்றாய் எம்மை ஏங்க வைத்து
ஐந்து ஆண்டுகளாய் நாம் இங்கு கண்ணீருடன்
கண்மணியே தேடுகின்றோம் உன்னை.

மரத்துப் போன மனங்கொண்ட பொல்லாத காலன்
மாரடைப்பு என்னும் பெயரிலே
விண்ணுக்கு அழைத்தானோ உன்னை
விதி முடிந்தது என்ற பொல்லாத சாட்டுடன்.

அவதியாய் உன்னுயிர் போகும் வேளையிலும்
அம்மாவை நினைத்தாயோ? அகத்தினிலே
ஆறுமா எங்கள் மனம். அன்பாலே உன்னை
ஆனந்தமாய் சுமந்த என் வயிறு கொதிக்குதடா,

வாழ்ந்து முடித்த நாங்கள் வையகத்தில் இருந்திடவே
வாழாது சென்ற உன்னை எண்ணி வாடி நிற்கின்றோம்
வருவாயா எங்கள் மகனே பேதலித்துப் போன மனத்துடன்
பெற்றோர் நாம் தேடுகின்றோம்.

உதிரத்தால் ஒன்றுபட்டு உறவாடி மகிழ
உன் சகோதரர் நாம் உள்ளம் கலங்கி
உன்னைத் தினம் கண்ணீருடன் தேடுகின்றோம்
சகோதரனே சென்ற இடம் சொல்லாயோ?

சித்தப்பா நீங்கள் சீக்கிரம் வாருங்கள்
சிறுவனாய் நான் இருந்தபோது தோளிலே சுமந்தவரே
அன்பாலே என்னை அதிகம் அள்ளி அணைத்தவரே
உன் அன்பை நினைக்கையிலே அழுகை வருகிறதே!

"சோலைபுரத்திற்கே" சோகத்தை தந்தையா உன் மறைவு
சேர்ந்து உறவாடிய நீ இன்று இல்லையென
சோர்ந்துபோன உன் நண்பர்களாய்
அயலவராய் தேடுகின்றோம் வந்திடு ஐயா!

ஆண்டுகள் ஐந்து சென்றபோதும் உன்
ஆத்மா சாந்தி பெற அனைவருமாய் வேண்டுகின்றோம்.
*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

121/44, சோலைபுரம்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 386 8675

(0033)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.